# சைவநெறி

## தரம் - 06

# ஆசிரியர் வழிகாட்டி

(2015ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.

# சைவநெறி
## தரம் - 06
## ஆசிரியர் வழிகாட்டி

தேசிய கல்வி நிறுவகம்
முதற் பதிப்பு - 2015

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,

மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,

தேசிய கல்வி நிறுவகம்,

மஹரகம, இலங்கை.

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 1, 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்

தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி சைவநெறிப் பாடத்தை கற்றலால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடையும் வகையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய இறைநம்பிக்கை,சமய நம்பிக்கை, சமய ஒழுகலாறு, வழக்காறு, விழுமியங்கள், தத்துவங்கள், சமய சமூக நடைமுறைகள், இலக்கியம் செயன்முறை அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் தேர்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டே ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான விடய உள்ளடக்கம் இவ் ஆசிரியர் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்கள், தரவிருத்தி உள்ளீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதால், முன் கூட்டியே அவற்றை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைக்கின்றது.

பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல, கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டள்ளன பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்குக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வழங்கும் போதும் ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும் போதும், உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கும், பாடசாலை முகாமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு இது தேவையான விளக்கத்தை அளிக்கிறது.

ஆசிரியர் வழிகாட்டியில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்பாடுகள் உள்ளடக்கப்படடுள்ளன. இச் செயற்பாடுகளை ஆசிரியர் அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. தமது ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைகளுக்கும் ஏற்ப, செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக நான்கு குழுக்களை அமைக்க வேணடுமென கூறியிருப்பினும் வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப அதை மாற்றிக் கொள்ளலாம். குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும் போது ஆசிரியர் சாதுர்யமாக நடந்து கொள்ளவேண்டும். உரிய தேர்ச்சி மட்டத்தை நிறைவு செய்யும் விதமாகச் செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப்பட்டுள்ளது. ஒரு பாடவேளைக்கு அப்பாற் செல்ல ஆசிரியருக்கு நேரிடலாம் ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தச் செயற்பாடுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேர அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தனிப் பாடவேளை, இருபாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச் செயற்பாடுகளைப் பகுதிகளாகச் செய்து கொள்ள வேண்டியது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை தொடர்ந்து மறுநாள் செய்யும் போது முதன் நாள் நிறைவு செய்தவற்றை மீண்டும் அறிமுகம் செய்து, தொடர வேண்டும் என்பதும் உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாதேனும் ஒரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். என உங்களிடம் எதிர்பார்க்கபட்டவில்லை. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, ஆய்வுகளைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி, மேற் கொள்ளப்படும் சிறந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம். புதிய விடயங்களை அறிமுகப்படுத்தும் போது உங்களின் வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்தும் நோக்கில் இவ் வழிகாட்டியை தேசிய கல்வி நிறுவகம் வழங்குகிறது. கணிப்பீட்டு, மதிப்பீட்டு செயற்பாடுகளை பயன்படுத்தி கற்றலை பரிசீலனை செய்து, உரிய மீளவலியுறுத்தல்களை செய்வது உங்கள் பணியாகும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. வழிகாட்டியில் செயற்பாடுகளின் இறுதியில் வீட்டில் செய்யப்படவேண்டியதும் ஆசிரியர்களால் அவதானிக்கப்பட வேண்டியதுமான செயற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது அவற்றை ஆசிரியர்கள் உரியவாறு செயற்படுத்தும் அதேவேளை மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல். சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

விரிவுரையாளர் (இந்துசமயம்)
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்..

# கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்** | : | **கல்விசார் அலுவல்கள் சபை**<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **இணைப்பாக்கம்** | : | **திரு பொன் ஜெயரூபன்**<br>செயற்றிட்ட அதிகாரி,<br>சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **விடய ஆலோசனை** | : | **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்**<br>தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம். |
| | | **பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி,**<br>கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம். |

எழுத்தாளர் குழு

| | | |
|---|---|---|
| **உள்வாரி** | : | **திரு. பொன் ஜெயரூபன்**<br>செயற்றிட்ட அதிகாரி,,<br>சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **வெளிவாரி** | : | **திரு. எஸ். சேதுரட்ணம்,**<br>ஆசிரியர், பது/பண்டாரவளை தமிழ் ம.மகா வித்தியாலயம்,<br>பண்டாரவளை. |
| | - | **திருமதி. எம். சண்முகதாஸ்,**<br>ஆசிரியர், தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,<br>திருகோணமலை. |
| | - | **திருமதி. ஆர். யோகானந்தம்,**<br>ஆசிரியர், பிலி/நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம்,<br>நுகேகொட. |
| | - | **திருமதி. என். சுதமதி,**<br>ஆசிரியர், யாழ்/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி,<br>சாவகச்சேரி. |
| | - | **திரு. பெ. பேரின்பராசா,**<br>ஆசிரியர், மட்/களுதாவளை மத்திய மகா வித்தியாலயம்,<br>களுவாஞ்சிக்குடி. மட்டக்களப்பு. |
| **கணனி வடிவமைப்பு** | - | **திரு. பொன் ஜெயரூபன்**<br>சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை, |
| **மொழிச் செவ்விதாக்கம்** | - | **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்** |
| **காரியாலய உதவி** | - | திருமதி . எஸ். சி.பிரியதர்சனி |
| | - | திரு. காமினி ரோஹன விமலசேன |
| | - | திரு. டயஸ் அமரசிங்க |

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் | v |
| கலைத்திட்டக் குழு | vi |
| 6.1.0 பாடத்திட்டம் | |
| 6.1.1 அறிமுகம் | 01 |
| 6.1.2 தேசிய கல்விக் குறிக்கோள்களும் அடிப்படைத் தேர்ச்சிகளும் | 02 |
| 6.1.3 பாடத்திட்டத்தின் நோக்கம், தேர்ச்சிகள் | 05 |
| 6.1.4 பாடத்திட்டம் | 06 |
| 6.1.5 கற்றல் - கற்பித்தல் முறை | 15 |
| 6.1.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 16 |
| 6.1.7 கணிப்பீடும் மதிப்பீடும் | 18 |
| 6.2.0 பாடத்திட்ட செயற்பாடுகள் | 20 |
| 10.2.1 கற்றல் கற்பித்தல் முறை - விளக்கம் | 21 |
| 6.3.0 கணிப்பீடும் மதிப்பீடும் | |
| 6.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம் | 78 |

# பாடத்திட்டம்

# சைவநெறி

# தரம் -06

# சைவநெறி

## பாடத்திட்டம்

## தரம் - 06

(2015 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை

மொழிகள் மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

இலங்கை

www.nie.lk

### 6.1.1 அறிமுகம்

விஞ்ஞான விருத்தியும் பொருளாதார மாற்றமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், மாணவர்களின் வாழ்வில் குறுக்கிடும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கத்தக்க ஆளுமையுள்ளவர்களாக்குவது கல்வியில் கடமையும் பொறுப்புமாகும். மாணவர்களை ஆளுமையுள்ளவர்களாக வளர்ப்பதில் சமய பாடம் முக்கிய பங்கினை வகிக்கிறது. சமயம் ஒரு வாழ்க்கை நெறி. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கான நெறிமுறைகளையும் பண்புகளையும் அது அமைத்துத் தருகின்றது.

மனித வாழ்வில், சமயம் வகிக்கின்ற முக்கியத்துவம் உணரப்பட்டமையாலேலே சைவநெறி இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெற்று வருகின்றது. அத்துடன்,2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கலைத்திட்டத்தில் இப்பாடம், கட்டாய பாடங்கள் ஐந்தினுள் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சைவநெறி பாடத்தினூடாக மாணவர்களின் அறிவு, திறன்,மனப்பாங்கு மட்டுமன்றி,சமய அடிப்படையில் வையத்துள் வாழ்வாங்கு வாழும் திறனை விருத்தி செய்யக் கூடிய ஒழுக்கம், பண்பாடு முதலான ஆளுமைப் பண்புகளும் ஆன்மீகப் பண்புகளும் விருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் சமய அபிமானம், சமய நம்பிக்கை,சமய உணர்வுகள் என்பன வளர்க்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2015 இலிருந்து நடைமுறைக்கு வரும் இக்கலைத்திட்டமானது, நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படையான தேர்ச்சிகளை வழங்கி, மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதற்குச் சமயக் கல்வியைப் பயன்படுத்துவதைப் பிரதான நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,

- இறைசிந்தனை
- சமய நம்பிக்கை
- சமய ஒழுகலாறுகளும் விழுமியங்களும்
- சமய இலக்கியங்களும் தத்துவங்களும்
- சமயமும் சமூக நடைமுறைகளும்
- சமய சமரசம்

முதலான விடயங்களையும் உள்ளடக்குவதாக இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தில் மாணவர்கள் அடையவேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய தேர்ச்சிகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள ஆசிரியர்கள் தம்மாலான ஒத்துழைப்பபை வழங்க முன்வர வேண்டும்.

## 2.0 கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

### 2.1 பொதுத் தேசியக் குறிக்கோள்கள்.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. தொடர்ந்து மாறிவரும் உலகில் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போசிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமான இடத்தைப் பெறுவதற்கு பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003)*

## 2.2 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தியாகும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் முன்னர் கூறிய தேசிய குறிக்கோள்களை அடைய வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடற் தேர்ச்சி**
எழுத்தறிவு, எண்ணிக்கை தொடர்பான அறிவு, வரைபுகளை உபயோகித்தல் மற்றும் தகவற் தொழில்நுட்பத் திறன் என்ற நான்கு பகுதிகளில் தொடர்பாடற் தேர்ச்சி தங்கியுள்ளது.

எழுத்தறிவு : பொறுமையுடன் செவிமடுத்தல், தெளிவாகக் கதைத்தல், ஒழுங்காக் எழுதுதல், பயனுள்ளவாறு கருத்துப் பரிமாறுதல்.

எண்ணிக்கை தொடர்பான அறிவு : உபகரணங்கள், வெளி, காலம் எண்ணுதல், எண்ணுவதற்கும அளவிடுவதற்குமான முறையாக இலக்கங்களை உபயோகித்தல்.

வரைபுகளை உபயோகித்தல் : கோடுகள், குறியீடுகளை உபயோகித்துக் கருத்துக்களை வெளிப்படுத்தல், மற்றும் கோடுகள், குறியீடுகள், வர்ணங்களைப் பயன்படுத்தி விளக்குதல், அறிவுறுத்தல் கருத்துக்களை வெளிப்படுத்துதல், அறிக்கையிடல்.

தகவற் தொழிநுட்பத்திறன் : கணனி அறிவுடன் கற்றலின் போதும், தொழில் செய்யும் போதும், பிரத்தியேக வாழ்வின் போதும் தகவற் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை உபயோகித்தல்.

**(ii) ஆளுமை விருத்திக்கான தேர்ச்சி**
ஆக்கபூர்வமான தன்மை, விரிவான சிந்தனை, தொடங்கும் ஆற்றல், முடிவெடுத்தல், பிரச்சினை தீர்த்தல், பகுத்தறிவுச் சிந்தனை, தர்க்கரீதியான சிந்தனை, குழுவுணர்வுடன் செயலாற்றுதல், ஆளிடைத் தொடர்பு, புதியவைகளைக் கண்டறிதல், ஆய்வு செய்தல் போன்றவற்றுடன் வெளிப்படையான எண்ணம், பொறுமை, சகிப்பு மற்றும் மனிதநேயம் போன்ற பண்புகள்.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சி**
இத்தேர்ச்சி சமூக, உயிரியல் மற்றும் பௌதீக சூழலுடன் தொடர்புடையது.

**சமூகச் சூழல்** : தேசிய செல்வங்கள் பற்றிய விளக்கம் பல்லினச் சமுகத்தின் அங்கத்தினராக இருப்பதுடன் இணைந்து வாழ்வதற்கான உணர்வினை கொண்டிருப்பதுடன் உரிய திறன்களையும் பெற்றிருத்தல். சாதாரண கடமைகள் பற்றிய உணர்வு, சமூகத்தொடர்பு, தனிநபர் நடத்தைகள், சாதாரண மற்றும் கட்டுப்பாடுகளுடனான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்பு, கடமைகளும் கட்டுப்பாடும்.

**உயிரியல் சூழல்** : உயிருள்ள உலகம், மக்களும் ஏனைய உயிரினங்களும், மரம், செடி, கொடிகள், காடுகள், கடல், நீர், வளி, தாவர - விலங்குகளுக்கும், விலங்குகளுக்கும் மனித வாழ்வுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றிய விளக்கம், உணர்வுகளும் திறன்களும்.

**பௌதீகச் சூழல்** : வெளி, சக்தி, எரிபொருட்கள், திரவியங்கள், பொருட்கள் மற்றும் மனித வாழ்வுடன் தொடர்பு, உணவு, உடை, சுகாதாரம், சக்தி வாய்ப்புக்கள், நித்திரை, அமைதி, ஓய்வு, கழிவுகள், மலசலங்களை அப்புறப்படுத்துவது தொடர்பான விளக்கம், உணர்வும் திறன்களும்.

கற்பதற்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதும் இதில் அடங்கும்.

**(iv) வேலை உலகுக்குத் தயாராகும் தேர்ச்சி**

பொருளாதார விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல், தனது தொழிலாற்றல், சவால்களை விளங்கிக் கொள்ளுதல், தனது ஆற்றலுக்கு ஏற்ற தொழிலொன்றைத் தெரிவு செய்வதுடன், போதியளவு வருமானத்தையும் பெறுதல். தனது ஆற்றல்களை உயரமட்டத்தில் வெளிப்படுத்தவும், அதன் பலாபலன்களை அதிகரிக்கச் செய்ய செயற்படுவதோடு அது தொடர்பான திறன்களை வளர்த்தலும்.

**(v) சமயமும் ஒழுக்க விழுமியங்களும் தொடர்பான தேர்ச்சி**

அன்றாட வாழ்வில் ஒவ்வொருவரும் ஒழுக்கவிழுமியங்கள், பண்பாடுகள் மற்றும் சமய அனுஷ்டானங்களுக்கு ஏற்புடையவாறு நடத்தல் என்பவற்றிற்கு இயைவாகி, மிகப் பொருத்தமானவற்றைத் தெரிந்து அதற்கு ஏற்றவாறு செயற்படுத்தல்.

**(vi) விளையாட்டு மற்றும் ஓய்வைப் பயன்படுத்தும் தேர்ச்சி**

அழகியற் செயற்பாடுகள், இலக்கியம், விளையாடுதல், விளையாட்டுக்களும் மெய்வல்லுனர் விளையாட்டும், விருப்பூட்டும் செயற்பாடுகளுடன் அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளினூடாக வெளிப்படும் ஆக்கபூர்வமான வினோதச் செயல்கள், மகிழ்ச்சி, ஆர்வம் மற்றும் இவ்வாறான மானுட அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்காகக் கற்றல்" தொடர்பான தேர்ச்சி**

துரிதமாக மாறிவருவதும், சிக்கலானதும் ஒருவரோடொருவரில் தங்கியுள்ளதுமான இவ்வுலகில் அம்மாற்றங்களுக்கு ஏற்புடையவாறு நடக்கும் போது, அவற்றினை உணர்வுடனும் அனுகூலமான முறையிலும் எடுத்து மக்களுக்கு சொல்வதும், சுதந்திரமாகக் கற்பதற்கான ஆற்றலை மக்களுக்கு வழங்குவதும்.

## 6.1.4 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

01. தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்தல்.

02. பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்ளல்.

03. திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுதல்.

04. ஆலயங்களில் சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுதல்

05. சைவசமய குரவர்கள்,சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுதல்

06. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துதல்.

07. நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுதல்.

08. ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல்.

09. பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளித்தல்.

## 6.1.5 தரம் 6 க்குரிய தேர்ச்சிகள்

1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.

2.0 பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர்.

3.0 திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்

4.0 ஆலயங்களில் சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவர்

5.0 சைவ சமய குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவர்

6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துவர்.

7.0 நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர்.

8.0 ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வர்.

9.0 பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளிப்பர்.

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர். | 1.1 கடவுளின் மேலான தன்மையையும் (பரத்துவம்) கருணைத்திறத்தையும் அறிந்து இறைசிந்தனையில் ஈடுபடுவர் | • **விநாயகர்**<br>விநாயகர் வழிபாடும் முக்கியத்துவமும் (வழிபாட்டு முறை) | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• விநாயகர் என்பதன் பொருளை விளங்கிக் கூறுவார்.<br>• விநாயகர் தோற்றம், வழிபடும் முறைகளை செய்து காட்டுவர் அவற்றை தொடர்ச்சியாகப் பழக்கப்படுத்திக் கொள்வர்<br>• விநாயகர் உருவம் செய்து வழிபடும் பொருட்களைக் கொண்டு உருவம் அமைத்து வழிபடுவர்<br>• கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை விநாயகர் பாடத்தினூடாக எடுத்துக் கூறி விநாயகக் கடவுளின் தோற்றமும், அவை சுட்டும் தத்துவப் பொருளும் பற்றி நவீன விஞ்ஞானமும் பிள்ளையார் உருவமும் பற்றி கலந்துரையாடி உண்மைத்தன்மைகளை வெளிப்படுத்திக் கூறுவர். | 01 |
| | | • **இறைவன்**<br>கருணையுள்ளவர் என்பதை கதை மூலம் விளக்கல் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இறைவன் கருணையுள்ளவர் என்பதை அறிந்து போற்றுவர்.<br>• கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை பற்றுதியடன் நம்புவர்.<br>• இறைவன் நம்மைக் காப்பவர் என்பதை அறிந்து போற்றுவர் இறைவன் பல வடிவங்களைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்று வழிபடுவர்.<br>• இறைவனின் மூவகைத் திருமேனிகளை அறிவர்.<br>இறைவனின் பஞ்ச கிருத்தியங்களை அறிவர். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 1.2 தமது வாழ்வியலில் நாளாந்த செயற்பாட்டில் இறைசிந்தனையுடன் ஈடுபடுவர் | • **சைவ இல்லம்**<br>• சைவ சமய பழக்க வழக்கங்கள்<br>- விளக்கேற்றல்,<br>- இறைவழிபாடு,<br>- திருமுறை ஓதுதல்,<br>- பெற்றோரை வணங்குதல் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவ இல்லத்தில் நாள்தோறும் காலை மாலை விளக்கேற்றி இறை வழிபாடு மேற்கொள்வர்<br>• இறைவழிபாட்டின் போது திழருமுறைப் பாடல்களை நாள்தோறும் ஓதுவார்<br>• இறைவழிபாட்டின் பின்னர் பெற்றோரின் காலில் வீழ்ந்து வணங்குவார் | 02 |
| | | • வீட்டில் கொண்டாடப்படும் விசேட தினங்களின் போது கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள் | • விசேட தினங்களின் போது கடைப்பிடிக்கப்படும் பழக்க வழக்கங்களை முறைப்படி பின்பற்றுவர் (உ-ம் மருத்து நீர் வைத்தல்) | 01 |
| | 1.3 சமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவர். | • **நாளாந்த செயன் முறைகள்**<br>- நீராடல்<br>- திருநீறு முதலான சிவசின்னங்கள் தரித்தல்<br>- தமக்காகவும் பிறருக்காகவும் பிரார்த்தனை செய்தல்<br>- பகிர்ந்துண்ணல் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள**<br>• நாளாந்தம் காலையிலும் மாலையிலும் நீராடல் உடலும் உள்ளமும் துய்மையடையும் என்பதை விளங்கிக் கூறுவர்.<br>• நீறில்லா நெற்றி பாழ் என்பதற்கிணங்க திருநீறு முதலான சிவசின்னங்களை முறைப்படி தினமும் தரித்துக் கொள்வர்.<br>• திருநீற்றின் மகிமை பற்றியும் அதை பூசிக் கொள்வதன் அவசியத்தையும் மற்றவர்களுக்கு எடுத்துரைப்பர்<br>• வழிபாட்டின் போது தமக்காகவும் பிறருக்காகவும் பிரார்த்தனைகளில் ஈடுபடுவர்.<br>• எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க என்று இறைவனிடம் கேட்பது போன்று பிறரின் நலன்கருதி வழிபாடுகளில் ஈடுபடுவர்<br>• உண்ணும் போதொரு கைப்பிடி என்பதற்கிணங்க பகிர்ந்து உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | • **சமுகம் சார்ந்த சமய விழுமியங்கள்**<br>- உண்மை பேசுதல்<br>- பெரியோரைக் கனம் பண்ணுதல்<br>- நன்றி மறவாமை<br>- தருமம் செய்தல்<br>- (கதைகள் மூலம் விளக்குதல்) | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• எப்பொழுதும் உண்மை பேச வேண்டும் என்பதை உறுதியாக்கிக் கொள்வர்.<br>• எச்சந்தர்ப்பத்திலும் பெரியோரை கனம் பண்ணுவர்<br>• சைவ இல்லத்தில் நாள்தோறும் காலை மாலை விளக்கேற்றி இறை வழிபாடு மேற்கொள்வர்<br>• நன்றி மறவாது வாழவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பர்<br>• வாழ்வில் தான தர்மங்களில் ஈடுபடுவார்<br>• சமுகம் சார்ந்து கடைப்பிடிக்கப்படும் சமய விழுமியங்களை தவறாது கடைப்பிடித்து வாழ்வர் | 04 |
| | 1.4 வாழ்வியல் மேம் பாட்டிற்காக சடங்கு களையும்,விரதங்கள், பண்டிகைகளையும் அறிந்து அவற்றை முறைப்படி கடைப் பிடிக்கும் முறையை இனங்காட்டுவர். | • **வாழ்வியல் சடங்குகள்**<br>- பிறப்பு முதல் ஏடு தொடக்கல் வரையிலான சடங்குகளையும் அவற்றின் முக்கியத்துவ த்தினையும் விளக்குதல்<br>,ı | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பிறப்பு முதல் ஏடு தொடங்குதல் வரையான சடங்குகளை பட்டியல் படுத்துவர்.<br>• சீமந்தம்,நாமகரணம்,காது குத்துதல், பல்லுக் கொழுக்கட்டை, முடி எடுத்தல் போன்ற சடங்குகளின் உண்மைத் தன்மையை விளக்குவர்.<br>• சுற்றாடலில் நடைபெறும் வாழ்வியல் சடங்குகளை நேரில் சென்று அவதானித்து கருத்துக்களை பரிமாறிக் கொள்வர்.<br>• வாழ்வியல் சடங்குகள் பற்றிய புதிய விடயங்களை தேடியறிவதற்கு பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி அறிந்து கொள்வார்<br>• சடங்குகளின் முக்கியத்துவத்தை விஞ்ஞான ரீதியாக தொடர்புபடுத்தி ஆராய்ந்து வெளிப்படுத்துவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | • **விரதங்கள்,பண்டிகைகள்** விரதங்களும் பண்டிகைகளும் பொது விளக்கம் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• விரதம் என்றால் என்ன என்பதை விவரிப்பார்.<br>• பண்டிகை என்றால் என்ன என்பதை விவரிப்பார்.<br>• விரதம், பண்டிகை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை ஆராய்ந்து கூறுவார்.<br>• விரதவகைகளை வகைப்படுத்திக் காட்டுவார்.<br>• பண்டிகைகள் கொண்டாடப்பட வேண்டியதன் அவசியத்தை விளங்கிக் கொள்வர்.<br>• விரதம், பண்டிகை என்பவற்றுக்கான வரைவிலக்கணங்களை வரைவிலக்கணப்படுத்துவர்.<br>• விரதங்கள் பண்டிகைகள் தொடர்பான பத்திரிகைச் செய்திகளை சேகரித்து காட்சிப்படுத்துவர். | 04 |
| 2.0 பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர். | 2.1 சமய நூல்களையும் அவற்றின் பக்தி வெளிப்பாடுகளையும் அறிந்து வெளிப்படுத்துவர் | • **திருமுறைத் தொகுப்பு** திருமுறைத் தொகுப்பின் வரலாறு –அறிமுகம் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள**<br>• திருமுறை தொகுக்கப்பட்ட வரலாற்றுக் கதையை விவரிப்பார்.<br>• திருமுறை என்பதன் பொருளை விளக்கிக் கூறுவர்.<br>• சைவத்திருமுறைகள் பற்றி விவரிப்பர்.<br>• திருமுறைகளை தொகுத்தவர், தொகுப்பித்தவர் பற்றிய விடயங்களைக் கூறுவர்.<br>• திருமுறைகளின் சிறப்பு பற்றிய விடயங்களைத் தேடியறிவர்.<br>• பன்னிரு திருமுறைகளின் தொகுப்பை அட்டவணைப்படுத்திக் காட்டுவர் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 2.2 நாயன்மாரின் வரலாறுகளினூடாக அவர்களது இறை நம்பிக்கையையும், பக்தி உணர்வையும் அறிந்து அவற்றின் வழி ஒழுகுவர், பக்தியின் சிறப்பை எடுத்துரைப்பர் | **இளையான் குடி மாற நாயனார்** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள**<br>• இளையான்குடி மாறநாயனாரின் சிவத்தொண்டினை விவரிப்பார்.<br>• இளையான் குடிமாறநாயனாரிடம் காணப்பட்ட நற்பண்புகளை எடுத்துரைப்பர்.<br>• இளையான்குடிமாற நாயனாரின் செயற்பாடுகளுக்கு மதிப்பளிப்பர்.<br>• இளையான்குடிமாற நாயனாரின் சிவத்தொண்டுகளை தாமும் பின்பற்றி சைவசமயத்தை மேன்மையுறச் செய்யும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்..<br>• இளையான்குடிமாற நாயனாரின் பணிகளில் ஏனையவரையும் ஈடுபடத் தூண்டுவர்.<br>• இறைவனை வழிபடுவோருக்கு இறைவன் அருள்புரிவான் என்பதை எடுத்துக் கூறுவர். | 02 |
| 3.0திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர். | 3.1 பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர். | • **பஞ்சபுராணமும் தோத்திரப்பாடல்களும்**<br>1. **திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்**<br>"இடரினும் தளரினும்..."<br>2.**திருநாவுக்கரச நாயனார் தேவாரம்**<br>"ஓசை ஒலியலாம் ஆனாய் நீயே..."<br>3.**சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்**<br>" பித்தாப் பிறை சூடி..." | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பஞ்ச புராணங்கள் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் பாடும் வழக்கத்தை கடைப்பிடிப்பர்<br>• பாடல்களை பண்ணோடு பாடுவர்<br>• வரிக்கிரமமாக, பிழைகளின்றி இறைசிந்தனையுடன் தோத்திரப்பாடல்களை பாடுவர்<br>• பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்பன அடங்கும் என்பதை அறிந்து கொள்வர்.<br>• முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும் என்பதை விவரிப்பர்.<br>• பஞ்ச புராணப் பாடல்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பர். | 13 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | 4.மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்<br>"பூசுவதும் வெண்ணீறு...."<br><br>5. திருவிசைப்பா<br>" ஒளிவளர் விளக்கே..."<br><br>6. திருப்பல்லாண்டு<br>" சீரும் திருவும்...."<br><br>7. பெரியபுராணம்<br>" உலகெலாமுணர்ந்து..."<br><br>8. திருப்புகழ்<br>" இசைந்த ஏறும்...." | | |
| 4.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவர் | 4.1 ஆலய வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் பேணும் முறையை எடுத்துரைப்பர் | • ஆலய வழிபாடு<br>(வழிபாட்டு முறைகளை விளக்குதல்)<br>. | • இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்<br>• ஆலயம் என்பதன் பொருளை விளக்குவர்.<br>• ஆலய வழிபாட்டின் அவசியம் பற்றி விபரிப்பர்.<br>• ஆலயத்திற்கு கொண்டு செல்லக் கூடிய பூசைப் பொருட்களை பெயரிடுவர்.<br>• ஆலயத்தில் செய்யத்தக்க, செய்யத்தகாத செயல்களை விபரிப்பர்<br>• ஆலயத்தில் வழிபடும் ஒழுங்குமுறையை விளக்கிக் கூறுவர்.<br>• ஆலயத்தில் நடைபெறும் பூசைகள் விழாக்கள் பற்றி விபரிப்பர்.<br>• ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கு ஏற்ப வழிபாடுகளில் ஈடுபடுவர். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 5.0 சைவ சமய குரவர்கள்,சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவர் | 5.1 சமய குரவர் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்ட ஒழுகும் முறையை அறிந்து கூறுவர் | • **சமய குரவர் நால்வர்** - வரலாற்று அறிமுகம் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சமய குரவர்கள் நால்வரும் இறைவன் அருள் பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்வர்.<br>• சமய குரவர்கள் நால்வரும் இறையருளுடன் அற்புதங்களைச் செய்து, மக்களின் துன்பத்தை நீக்கி இறைபக்தியை வளர்த்தனர் என்பதை கதைகளுடாக விவரிப்பர்.<br>• சமய குரவர்களின் குரு பூசைத்தினங்களைக் கொண்டாடி அவர்களின் பணிகளுக்கு மதிப்பளிப்பர்.<br>• சமய குரவர்கள் பாடிய தேவாரப் பதிகங்களை மனனம் செய்து பாடுவர்.<br>• சமய குரவர்களின் பணிகளை தாம் வாழும் சூழலில் முன்னெடுத்து பணிகளில் ஈடுபடுவர். | 05 |
| | 5.2 ஈழத்தில் சமயம் வளர்த்த பெரியார்களையும் அவர்களது பணிகளையும் அறிந்து அவர்களுக்கு மதிப்பளிக்கும் முறையை விளக்குவர். | • **சுவாமி ஞானப்பிகாசர்** - வரலாற்று அறிமுகம் அவரின் பணிகளும் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சுவாமி ஞானப்பிரகாசர் ஈழத்தில் சைவ சமயத்தை நிலைநிறுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தார் என்பதை அறிந்துகொள்வர்.<br>• அவருடைய ஜீவகாருண்ய பண்பை விளக்குவர்.<br>• தமிழகத்திலும் சமய பணியைத் தொடர்ந்தார் என்பதையும் சைவத்துக்கு சேவைகள் செய்தார் என்பதையும் எடுத்துக்கூறுவர்.<br>• அவரால் மேற்கொள்ளப்பட்ட எழுத்து முயற்சிகள், உரைநூல்கள், சித்தாந்த நூல்கள் என்பவற்றை பட்டியற்படுத்துவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துவர். | 6.1 சைவ சித்தாந்தம் தொடர்பாக அடிப்படை விளக்கம் பெற்று தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை இனங்காண்பர், அவை | • **முப் பொருள் (அறிமுகம்)** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவ சித்தாந்தம் கூறும் உண்மைப் பொருட்கள் மூன்று என்பதை தெளிவு படுத்துவர்<br>• முப்பொருட்களைக் கூறுவர்.<br>• ஆன்மாக்களுக்கு வழங்கப்படும் மறு பெயர்கள் மூன்று எழுதிக்காட்டுவர்.<br>• மும்மலங்களை விளக்கிக் கூறுவர். பசுவானது இறைவனை அடைய முடியாது தடுப்பதில் பாசத்தின் செயற்பாடுகளை பட்டியற்படுத்துவர்.<br>• பாசத்திலிருந்து ஆன்மா விடுபடுகின்ற போதே பதியை அடைகின்றது என்பதை ஏற்பர். | 03 |
| 7.0 நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர். | 7.1 நாட்டார் வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் கடைப்பிடிக்கும் முறைகளை எடுத்துரைப்பர். | • **நாட்டார் வழிபாடு (அறிமுகம்)**<br>ஆகமம் சாரா வழிபாடு | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆகமம் சாரா வழிபாட்டின் வரைவிலக் கணத்ததைக் கூறுவர்<br>• ஆகமம் சாரா தெய்வங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவர்<br>• பிரதேச ரீதியாகக் காணப்படும் நாட்டார் தெய்வங்கள் பற்றியும், சமய நம்பிக்கைகளையும் ஏற்று மதிப்பளிப்பர்<br>• ஆகமம் சாரா வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவர்.<br>• ஆகமம் சாரா வழிபாட்டினால் கிடைக்கும் பயன் களை விளக்குவர். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 8.0 ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வர். | 8.1 ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பர் | • **விநாயகர் ஆலயம்**- பறாளை விநாயகர் ஆலயம்<br>• **சிவாலயம்**- திருக்கோணேச்சரம்<br>• **முருகன் ஆலயம்**- மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம்<br>• **அம்மன் ஆலயம்**-<br>- திருகோணமலை பத்திரகாளியம்மன்<br>- நுவரெலியா சிதையம்மன் ஆலயம் (சீதா எலிய) | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• விநாயகர் ஆலயங்களில் பறாளை விநாயகர் ஆலயம் பற்றி அறிந்து வழிபாடுகளில் ஈடுபடுவர்<br>• திருக்கோணேஸ்வரர் ஆலயம் பற்றி அறிந்து வழிபாடுகளில் ஈடுபடுவர்.<br>• மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் பற்றி அறிந்து வழிபாடுகளில் ஈடுபடுவர்<br>• திருகோணமலை பத்திரகாளியம்மன் ஆலயம் மற்றும் நுவரெலியா சீதையம்மன் ஆலயம் என்பவற்றை அறிந்து வழிபாடுகளில் ஈடுபட முன்வருவர். | 06 |
| 9.0 பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளிப்பர். | 9.1 பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து கொள்வர், அவை பற்றி விளக்குவர். | • **இலங்கையிலுள்ள சமயங்கள் பற்றிய பொது விளக்கம்** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இலங்கையிலுள்ள அனைத்து மதங்கள் பற்றியும் அறிந்து அவைகள் கூறும் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பர்.<br>• சமயங்கள் கூறும் மனித விழுமியங்கள் மற்றும் விழாக்கள், விசேட தினங்கள் பற்றியும் அறிந்து அதற்கேற்ப அவற்றுக்கு மதிப்பளிப்பர். | 02 |

### 6.1.5 கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவ மட்டம், பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் மாணவரிடம் உருவாக்கப்படும் கற்றல் பற்றிய கட்டுருவாக்கவியல் சிந்தனையில் உருவாகும் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை, மாணவர்களிடம் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படை நோக்கமாகும்.

மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத்திறன், கற்பனைத்திறன், தொடர்பாடல் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், ஆன்மீகம் என்பன சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக் கூடிய ஒரு கற்றல் முறையாகவும் இது அமைந்துள்ளது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான மாற்றமொன்றை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சைவசமய பாடத்தைப் பொறுத்தவரை முக்கியமாக எதிர்பார்ப்பது, மனப்பாங்கு விருத்தியும் நடத்தை மாற்றமுமாகும். அதனை ஏற்படுத்த ஓர் இலகு வழியாக தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சி மையக் கல்வியில் ஆசிரியரது வகிபாகம் தெளிவானதொரு மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. தாம் பெற்றிருக்கும் அறிவை மாணவர்களுக்கு அப்படியே ஒப்புவிப்பதன் மூலம் அறிவை இடமாற்றம் செய்பவராக விளங்கிய ஆசிரியரின் செயன்முறை மாற்றப்பட வேண்டியதொன்றாகும். தேர்ச்சியை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட சைவநெறி பாடத்திட்டத்தில், சமயம் சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், இங்கு மாணவரின் செயற்பாடு, பங்கு பற்றல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடையவேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவு மட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்யவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அத்துடன் மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழி காட்டுவது ஆசிரியரது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஆரம்பத்திலேயே மாணவரிடம் விருப்பு, வெறுப்பு, எதிர்பார்ப்பு என்பவற்றை ஏற்படுத்த வேண்டும். இங்கு விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படுவது அவசியமாகும். இதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்களைக் கேட்டல், அட்டைகளைக் காட்சிப்படுத்தல், திருமுறைப்பாடல்கள், தோத்திரப்பாடல்கள் என்பவற்றைப் பாடச் செய்தல், ஓதச் செய்தல், ஒளி, ஒலி நாடாக்கள் என்பவற்றைப் பயன்படுத்துதல், செய்து காட்டல் முதலானவை அவற்றுட் சிலவாகும்.

சைவநெறி வாழ்வியலுடன் தொடர்புடைய ஒரு பாடமாகும். அதனால், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஊடாக மாணவரிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆதலால், ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை நடத்துவதற்காகத் திறந்த உள்ளத்துடனும் போதிய திட்டமிடலுடனும் தயாராக வரவேண்டும். இங்கு மாதிரிகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. தமது தற்றுணிவுக்கேற்ப மாதிரிகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் உரிமையுடையோராவர்.

### 6.1.6 பாடசாலைக் கொள்கையும் வேலைதிட்டமும்

சமயக் கல்வி கற்றல் - கற்பித்தல் தொடரப்பாக பாடசாலையிலும் அயலிலும் கிடைக்கின்ற பௌதிக வளங்களையும், மனிதவளங்களையும் உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையையும் திட்டமிட்டு செயற்படுத்துவது அவசியம்.

சைவ சமய வழிபாட்டு முறைகளுக்கும், சமயம் சார்ந்த நடவடிக்கைகளுக்குமென பாடசாலைக் கொள்கை இருத்தல் அவசியம்.

சமயக் கல்வியின் அவசியத்தை, தகுந்த ஆதாரங்களுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களின் உதவிகளைப் பெற்று கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளலாம்.

சைவசமயத்தைக் கற்பிப்பதற்கு, பாடசாலையில் வளப் பற்றாக்குறை ஏற்பட்டால் அதனை நிவர்த்தி செய்வதற்குப் பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் முதலானோரதும் சமய நிறுவனங்களதும் ஒத்துழைப்புக்களைப் பெறலாம்.

மேற்படி கொள்கைகளை நடைமுறைபடுத்துவதற்கும், ஆற்றல்மிக்கோரை உருவாக்குவதற்கும், சமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுப்பதறக்குப் பொருத்தமான பின்னணியைப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில், பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இசைவுபடுத்தப்படல் அவசியமாகும்.

சைவநெறிப் பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின் பால் வழிப்படுத்தப்படும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும்போது சைவசமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

- பாடசாலையில் தினசரிப் பிரார்த்தனைகள், வெள்ளிக்கிழமை பிரார்த்தனை என்பவற்றுக்கு ஏற்ற வசதிகள் அளித்தலும், மாணவர் அனைவரும் கலந்து கொள்ள வழிவகை செய்தலும்
- ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நற்சிந்தனை கூற இடமளித்தல்
- வகுப்பறையில் சுவாமிப்படங்களை வைத்து வழிபட ஊக்குவித்தல்
- பாடசாலைக்கு அண்மையிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபட வழிப்படுத்தல்
- சமய தீட்சை வழங்கல்
- குருபூசை, பாடசாலைச் சமய விழா,சமயப் பேச்சு, பண்ணிசை, நாடகப்போட்டி முதலானவற்றினை நடத்த ஒழுங்கு செய்தல்.
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- மாணவரின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக் கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடத்தல்
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் நடத்த ஒழுங்கு செய்தல்
- பாடவிடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்களச் சுற்றுலாக்களையும் திட்டமிட்டு, சரியாக நிறைவேற்றுதல்.
- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கம் போன்றவற்றில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்
- வெவ்வேறு தலைப்புக்களில் திட்டமிடப்பட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடத்துதல்

- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்கள் என்பவற்றில் பங்கு கொள்ள ஊக்குவித்தல் மாணவரின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக் கூடிய வகையில் இவ்வாறான செயற்பாடுகளை வழங்கலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்ளிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காகத் தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதிமிக்க நேரமுகாமையும் மிக அவசியம்.

ஒவ்வொரு சமய பாட ஆசிரியரும் தமது வகுப்பில் பயிலும் மாணவர்களைக் கீழ்வரும் நற்பழக்கவழக்கங்களை உடையவர்களாக ஆக்குதல் வேண்டும்.

- கடவுள் பக்தி
- தாய், தந்தை, குரு ஆகியோரைத் தினம் தினம் வணங்குதல்
- மூத்தோரிடம் மரியாதை
- ஒழுக்கம்
- தியாகமும், தொண்டும்
- சமய அறிவில் ஆர்வம்
- சைவ தர்ம நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்

மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவதை ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொண்டு செயற்படல் வேண்டும். பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவதனால் அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம்.

## 6.1.7 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூடாக, மாணவர் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடைந்துள்ளனரா என்பதை அறிவதற்கு ஏற்ற இலகுவான வழிமுறைகளாக கணிப்பீடும் மதிப்பீடும் அமைந்துள்ளது.
மாணவரின் நடத்தைசார் பண்புகள், சமய வழிபாடுகளில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை, சமய, சமூக செயற்பாடுகளில் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் போது வெளிக்காட்டும் தன்மை, பங்கேற்கும் தன்மை என்பன கணிப்பீடு செய்யப்பட வேண்டும். இவற்றை முறை சார்ந்த வழிகளில் வகுப்பறைக்கு உள்ளேயும், வெளியேயும் கணிப்பீடு செய்ய முடியும்.

மதிப்பீட்டினைப் பல வழிகளில் மேற் கொள்ள முடியும். பாடம் தொடர்பான மதிப்பீடு பாட அலகின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது, வாய்மொழிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற் கொள்ள முடியும். தவிர, தவணை இறுதியில் ஒப்படை, செயற்றிட்டங்களை வழங்குதல் என்பவற்றிறூடாகவும் மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

மேலும், திருமுறைகள் தோத்திரப்பாடல்கள் பாடும் போது, மாணவர் பிழையற மனனம் செய்து, உச்சரிப்புத் தெளிவு, பண், இசை என்பவற்றுடன் சரியான நிலையில் நின்று பாடுகிறார்களா என்பதையும் கணிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறே, ஆலய வழிபாடு, அங்கு செய்யப்படும் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்கார முறைகளையும் தெய்வங்களை வழிபடும் ஒழுங்கு முறைகளையும் அவதானிக்க வேண்டும். இவற்றுக்கு எற்ற மாதிரி மதிப்பீட்டுக் கருவிகைள முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும்.

| த வ ணை | தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளை | மொத்தப் பாடவேளை |
|---|---|---|---|---|
| தவணை -1 | 1.0<br><br><br>3.0 | 1.1<br>1.2<br>1.3<br>3.1 (1,2, ஆம் பாடல்) | 02<br>03<br>06<br>06 | 17 |
| தவணை -2 | 1.0<br>2.0<br><br>3.0<br>4.0<br>5.0 | 1.4<br>2.1<br>2.2<br>3.1(3,4,5,6 ஆம் பாடல்)<br>4.1<br>5.1<br>5.2 | 08<br>02<br>02<br>05<br>03<br>05<br>02 | 27 |
| தவணை -3 | 3.0<br>6.0<br>7.0<br>8.0<br>9.0 | 3.1 (7,8ஆம் பாடல்)<br>6.1<br>7.1<br>8.1<br>9.1 | 02<br>03<br>03<br>06<br>02 | 16 |
| | | | | 60 |

# செயற்பாடுகள்

## கற்றல் கற்பித்தல் முறைகள் - விளக்கம்

| தொடர் இலக்கம் | தேர்ச்சி இலக்கம் | செயற்பாடுகளின் தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 01. | 1.1 | நாள்தோறும் முதல் வக்கமாக விநாயகரை வழிபட்டு எமது செயல்களைத் தொடங்குவோம் | 21 |
| 02. | 1.1 | இறைவன் கருணை உள்ளவர் என்பதை கதைமூலம் அறிந்து கொள்வோம். | 25 |
| 03. | 1.2 | நாளாந்தம் வீடுகளில் இறைசிந்தனையுடன் வழிபாடுகளில் ஈடுபடுவோம். | 27 |
| 04. | 1.2 | விசேட தினங்களின்போது வீட்டில் சைவ நடைமுறைகளைப் பேனுவோம். | 30 |
| 05 | 1.3 | நாளாந்த செயற்பாடுகளில் அவதானமாக ஈடுபடுவோம். | 32 |
| 06. | 1.3 | எமது அன்றாட வாழ்வில் சமய விழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவோம் | 34 |
| 07. | 1.4 | வாழ்வியல் சடங்குகளை பின்பற்றுவோம் | 38 |
| 08. | 1.4 | பண்டிகைகளை கொன்டாடுவோம் விரதங்களை அனுட்டிப்போம் | 41 |
| 09. | 2.1 | திருமுறைகளில் இறைவன் பெருமையை அறிந்து தமத வாழ்வில் பக்தியுடன் பதிகங்களைப் பாடுவோம் | 43 |
| 10. | 2.2 | இளையான்குடிமாறநாயனார் பற்றி அறிந்து கொள்வோம். | 45 |
| 11. | 3.1 | பஞ்சபுராணங்கள் பற்றி அறிந்து பாடுவோம் | 48 |
| 12. | 3.1 | திருஞானசம்பந்தர் தேவாரங்கள் பற்றி அறிந்து பாடுவோம் | 50 |
| 13. | 3.1 | திருநாவுக்கரசர் தேவாரங்கள் பற்றி அறிந்து பாடுவோம் | 52 |
| 14. | 3.1 | சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்கள் பற்றி அறிந்து பாடுவோம் | 54 |
| 15. | 3.1 | 8ஆம்,9ஆம்,12ஆம் திருமுறைப்பாடல்கள் பற்றி அறிவோம் | 56 |
| 16. | 3.1 | திருப்புகழ் பற்றி அறிந்து போற்றுவோம் | 58 |
| 17. | 4.1 | ஆலய வழிபாட்டுமுறைகளை அறிந்து அவற்றில் ஈடுபடுவோம் | 60 |
| 18. | 5.1 | சைவ சமய குரவர் வரலாறுகளை அறிந்து அவர்கள் வழி ஈடுபடுவோம் | 62 |
| 19. | 5.2 | சுவாமி ஞானப்பிரகாசர் பணிகளை மதிப்போம் | 65 |
| 20. | 6.1 | சைவசித்தாந்த தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை அறிவோம் (முப்பொருள்) | 67 |
| 21. | 7.1 | நாட்டார் வழிபாடு பற்றி அறிவோம் - (ஆகமம் சாரா வழிபாடு) வழிபாட்டின் அம்சங்களை நம்பிக்கைகளை அறிந்து போற்றுவோம் | 69 |
| 22. | 8.1 | ஈழத்துச் சைவ ஆலயங்கள் பற்றி அறிந்து பேனிப் பாதுகாப்போம் | 72 |
| 23. | 9.1 | பிற சமயங்களின் ஒழுகலாறுகள் வழக்காறுகள் பற்றி அறிந்து மதிப்போம் | 75 |

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : கடவுளின் மேலான தன்மையையும் (பரத்துவம்) கருணைத்திறத்தையும் அறிந்து இறைசிந்தனையில் ஈடுபடுவர்.

**செயற்பாடு** : நாள்தோறும் முதல் வணக்கமாக விநாயகரை வழிபட்டு எமது செயல்களைத் தொடங்குவோம்.

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்** :

- இறை சிந்தனையுடன் விநாயகரை வழிபட்டு தமது செயல்களைத் தொடங்குவர்.
- விநாயகர் என்பதன் பொருளை விளங்கிக் கூறுவர்.
- விநாயகர் தோற்றம், வழிபடும் முறைகளை விளக்கியும் செய்தும் காட்டுவர் அவற்றை தொடர்ச்சியாகப் பழக்கப்படுத்திக் கொள்வர்.
- விநாயகர் உருவம் செய்து வழிபடும் பொருட்களைக் கொண்டு உருவம் அமைத்து வழிபடுவர்.
- கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை விநாயகர் பாடத்தினூடாக எடுத்துக் கூறி விநாயகக் கடவுளின் தோற்றமும், அவைசுட்டும் தத்துவப் பொருளும் பற்றி நவீன விஞ்ஞானமும் பிள்ளையார் உருவமும் பற்றி கலந்துரையாடி உண்மைத் தன்மைகளை வெளிப்படுத்திக் கூறுவர்..

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்** :

**படி 1 :**

- விநாயகர் வழிபாட்டுக்கான வகுப்பறைச் சூழல் ஒன்றினை ஏற்படுத்துதல்.
- வகுப்பறையைச் சுத்தமாக்குதல் அல்லது பாடசாலைக்கு மிக அருகில் கோயில் இருந்தால் அவர்களின் அனுமதியுடன் இச் செயற்பாட்டினை அங்கு நிகழ்த்தலாம்.
- எமது வழிபாட்டில் விநாயகப் பெருமானின் வழிபாடே முதலில் இடம் பெறுகின்றது என்பது பற்றிய முன்னறிவை மீட்டும் வகையில் மாணவர் அறிந்த சந்தர்ப்பங்களைக் கூற அவர்களுக்கு இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
- கடவுள் வழிபாட்டின் போது நாம் முதலில் பிள்ளையாரையே வழிபடுகின்றோம்.
- வழிபாட்டின் போது முதலில் விநாயகருக்குரிய மந்திரம் ஆகும். எந்தவொரு செயலின் வெற்றிக்காகவும் (சித்தி) விநாயகரை முதலில் வழிபடப்படுகின்றனர்.
- விநாயகர் வழிபாடானது இலகுவான ஒன்றாகும்.
- வினைகளைத் தீர்ப்பவர் விநாயகர் எனும் நம்பிக்கை வழிபாட்டினை முக்கியத்துவப்படுத்தி நிற்கின்றது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.1.2 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

படி 3 :

- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குகள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- இது கடவுள் வழிபாட்டுடன் தொடர்புடைய செயற்பாடு என்பதால், மாணவர், வகுப்பறைச் சுத்தத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். இது தொடர்பாகவும் மாணவரை வழிப்படுத்தவும்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- அத்துடன் தங்கள் தங்கள் குழு சார்பாக உருவாக்கிய பிள்ளையாரை பொருத்தமான முறையில் காட்சிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படி 4 :

- குழுக்கள் முன்வைத்த விடயங்களின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள்.
- அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- விநாயகர் என்பதன் பொருள் தமக்கு மேல் ஒரு தலைவர் இல்லாதவர்.
- செயல்களைத் தொடங்கும் போது முதலில் விநாயகரை வழிபட வேண்டும்
- விநாயகர் வழிபாட்டு முறைகள்
- விநாயகர் வழிபாடு நடைபெறும் இடங்கள்
- எழுதும் பொழுது பிள்ளையார் சுழி (உ) போட்டு எழுதும் வழக்கம் இன்றும் உள்ளது.
- சாணம், மஞ்சள், சந்தனம் என்பவற்றால் பிள்ளையாரை அமைத்து அதில் அறுகம்புல் சொருகி வழிபடலாம்.
- விநாயகரை வணங்குவதால் பல பயன்கள் கிடைக்கும்.
- அன்றாடம் இறை சிந்தனையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை மாணவர் மனங்களில் வளர்க்க வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 1.1.1 இல் உள்ளது போன்ற விநாயகர் படம் ஒன்று
- இணைப்பு 1.1.2 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்
- விநாயகர் வழிபாடு தொடர்பான ஒளிப்படம்
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

•

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

1. விநாயகரை முதலில் வழிபடும் சந்தர்ப்பங்களை அறிந்து, குறிப்பிடுவர்.
2. எந்தச் செயலையும் தொடங்கும் முன்னர், விநாயகர் வழிபாட்டில் ஈடுபட்டு அதன் பின் தொடங்குவர்.
3. நாள்தோறும் எழுதத்தொடங்கும் போது, பிள்ளையார் சுழி போட்டு எழுதுவர்.
4. விநாயகரை வழிபடும் போது, அவருக்குரிய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பர்
5. மங்களகரமான எந்தச் செயலின் போதும் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடும் முறையைக் கடைப்பிடிப்பர்.

இணைப்பு 1.1.1



**மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம்**                                        **இணைப்பு 1.1.2**

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள். அதிலுள்ள செயற்பாடுகளை வகுப்பறையில் செய்து காட்டுங்கள். அதனை வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கடைப்பிடியுங்கள்.

குழு 1

1. விநாயகர் என்பதன் பொருளை எழுதுங்கள்.
2. விநாயகரை முதலில் வழிபடும் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுங்கள்.
3. சாணத்தால் பிள்ளையார் பிடிக்கும் முறையை (சுத்தமாக) செய்துகாட்டுங்கள்.

குழு 2

1. விநாயகர் வழிபாடு மேற்கொள்ளப்படும் இடங்கள் மூன்றினை எழுதுங்கள்.
2. விநாயகரை வழிபடும் போது நீங்கள் செய்ய வேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுங்கள்.

குழு 3

1. தோப்புக்கரணம் போடுதலுடன் தொடர்புடைய கதையின் சுருக்கத்தை எழுதுங்கள்.
2. சிதறுதேங்காய் உடைப்பதன் நோக்கத்தை எழுதுங்கள்
3. சந்தணத்தால் பிள்ளையார் பிடிக்கும் முறையை (சுத்தமாக) செய்துகாட்டுங்கள்.

குழு 4

1. நெற்றியில் குட்டி வழிபடுதலுடன் தொடர்புடைய கதையின் சுருக்கத்தை எழுதுங்கள்.
2. நெற்றியில் குட்டி வழிபடுவதன் அடிப்படை நோக்கம் என்ன?
3. மஞ்சளால் பிள்ளையார் பிடிக்கும் முறையை (சுத்தமாக) செய்துகாட்டுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள். அதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்

   1……………………………………………………………………………………………

   2……………………………………………………………………………………………

   3……………………………………………………………………………………………

   4……………………………………………………………………………………………

   5……………………………………………………………………………………………

2. **பெற்றோருக்கானது** - வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள்

   வீட்டில் நாள்தோறும் பிள்ளைகள் விநாயகரை வழிபடும் அவசியம் பற்றிக் கூறுங்கள், அவற்றை செய்வதன் மூலம் அடைந்து கொள்ளும் நன்மைகளை தெளிவுபடுத்துங்கள். அவற்றுக்கான விஞ்ஞான ரீதியான கருத்துக்களை முன்வைத்து அவற்றில் மாணவர்கள் தொடர்ச்சியாக ஈடுபட வழிகாட்டுங்கள். வழிபாட்டில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றனரா என்பதை அவதானித்து செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுங்கள்.

**தேர்ச்சி 1.0 : தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம்1.1 :** கடவுளின் மேலா தன்மையையும் (பரத்துவம்) கருணைத்திறத்தையும் அறிந்து இறைசிந்தனையில் நாட்டம் கொள்வர்.

**செயற்பாடு : இறைவன் கருணையுள்ளவர் என்பதை கதை மூலம் அறிந்து கொள்வோம்**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

- இறைவன் கருணையுள்ளவர் என்பதை அறிந்து போற்றுவர்.
- கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை பற்றுறுதியுடன் நம்புவர்.
- இறைவன் நம்மைக் காப்பவர் என்பதை அறிந்து போற்றுவர்
- இறைவன் பல வடிவங்களைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்று வழிபடுவர்.
- இறைவனின் மூவகைத் திருமேனிகளை அறிவர்.
- இறைவனின் பஞ்ச கிருத்தியங்களை அறிவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

படி 1:
- இறைவன் பற்றி மாணவர் அறிந்த விடயங்களைக் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உயிர்கள் அனைத்திற்கும் மேலானவர் என்பதால் தான் அவர், தலைவன் என அழைக்கப்படுகின்றார். இறைவன் எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிபவர், பிறப்பு இறப்பு அற்றவர், ஆதியும் அந்தமும் இல்லாதவர், துன்பங்களுக்கு உள்ளாகாதவர் என்பது பற்றிய உதாரனங்களை முன்வைத்து மாணவர்களுக்கு கடவுளின் மேலான தன்மையையும் (பரத்துவம்)கருணைத்திறத்தையும் அறிந்து இறைசிந்தனையில் நாட்டம் கொள்ள வழிப்படுத்துங்கள்.

படி 2:
- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள் உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல்,இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.1.2 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்) குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

படி 3:
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படி 4 :

- குழுக்கள் முன்வைத்த விடயங்களின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
    - அனைத்துப் படைப்பிற்கும் சிவபெருமானே காரணமாவார்.
    - நம்மைக் காப்பவர்.
    - தினந்தோறும் அவரை வழிபடுதல் வேண்டும்.
    - பல வடிவங்களைக் கொண்டு காணபடுகின்றார்.
    - அவை ஆலயங்களிற் காணப்படுகின்றன.
    - ஆலய வழிபாடு ஆன்மாக்களுக்கு இன்றியமையாதது ஆகும்.
    - மூவகைத் திருமேனிகள்.
    - பஞ்ச கிருத்தியங்கள்.

**தர உள்ளீடுகள்** :
- இணைப்பு 1.1.2 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

1. இறைவன் கருணையுள்ளவர் என்பதை அறிந்து போற்றுவர்.
2. கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை பற்றுறுதியுடன் நம்புவர்.
3. இறைவன் நம்மைக் காப்பவர் என்பதை அறிந்து போற்றுவர்
4. இறைவன் பல வடிவங்களைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்று வழிபடுவர்
5. இறைவனின் மூவகைத் திருமேனிகளை அறிவர்.
6. பஞ்ச கிருத்தியங்களை அறிவர்.

**மாதிரிச் செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.1.2**

ஓவ்வொரு குழுவும் உங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள். குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதிகளை வழங்கவும்.

- இவ்வுலகத்திற்கு கருத்தா யார்?
- நம்மைக் காப்பவர் யார்?
- இறைவனின் திருவுருவங்களின் பெயர்கள் நான்கு எழுதுக?
- இறைவன் உறைந்திருக்கும் இடம் எது?
- இறைவனின் மூவகைத் திருமேனிகளும் எவை?
- இறைவன் மூவகைத் திருமேனிகளை எடுப்பதற்கான நோக்கம் என்ன?
- இறைவன் ஆலயத்தில் உறைந்திருப்பது எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?
- ஆலயத்தில் அல்லாது மற்றைய இடங்களில் உறைந்திருப்பது எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?
- பஞ்ச கிருத்தியங்களும் எவை?
- இறைவன் கருணையே வடிவானவர் என்பதை விளக்கும் புராணக் கதை ஓன்றினைத் தேடி அதனை வகுப்பறையில் பக்தியுடன் கூறவும்.

ண

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

    1……………………………………………………………………………………

    2……………………………………………………………………………………

    3……………………………………………………………………………………

    4……………………………………………………………………………………

2. பெற்றோருக்கானது- வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள்
    இறைவன் கருணையுள்ளவர் அவர் உண்மையானவர், நம்மைக் காப்பவர் என்பதையும் இறைவன் பல்வேறு வடிவங்களில் அருள் பாலிக்கிறார். என்பதையும் அவரின் ஒவ்வொரு தோற்றத்திற்கும் ஒவ்வவொரு காரணமும் தத்துவமும் உள்ளது என்பதை விளக்கிக் கூறுங்கள். ஆலய வழிபாட்டை முக்கியப்படுத்தி வழிகாட்டுங்கள்

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : தமது வாழ்வில் நாளாந்த செயற்பாட்டில் இறைசிந்தனையுடன் ஈடுபடுவர்.

**செயற்பாடு** : **நாள்தோறும் வீட்டில் இறை சிந்தனையுடன் வழிபாடுகளில் ஈடுபடுவோம்.**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள் :**

- சைவ இல்லத்தில் நாள்தோறும் காலை மாலை விளக்கேற்றி இறை வழிபாடு மேற்கொள்வர்
- இறைவழிபாட்டின் போது திருமுறைப் பாடல்களை நாள்தோறும் ஓதுவார்
- இறைவழிபாட்டின் பின்னர் பெற்றோரின் காலில் வீழ்ந்து வணங்குவார்
- விசேட தினங்களின் போது கடைப்பிடிக்கப்படும் பழக்க வழக்கங்களை முறைப்படி பின்பற்றுவர் (உ-ம் மருத்து நீர் வைத்தல்)

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

படி 1 :

- மாணவர்கள் அன்றாடம் வீடுகளில் கடைப்பிடிக்கும் சைவப் பழக்க வழக்கங்களைக் கூற இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
- வீடுகளில் அன்றாடம் கடைப்பிடிக்கும் சைவப் பழக்கவழக்கங்கள்
  - காலையும் மாலையும் இறைவனுக்கு விளக்கேற்றல்
  - கட்டாயமாக காலையும் மாலையும் இறைவனை வணங்குதல்.
  - கட்டாயமாக காலையும் மாலையும் பெற்றோரை வணங்குதல்.
  - வழிபாட்டின் போது கட்டாயமாக திருமுறை ஓதுதல் வேண்டும்.
- சைவப் பழக்கவழக்கங்களை தொடர்ச்சியாகப் பேணுதல் வேண்டும்.

படி 2 :

- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.2.2 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

படி 3 :
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- இது கடவுள் வழிபாட்டுடன் தொடர்புடைய செயற்பாடு என்பதால், மாணவர், வகுப்பறைச் சுத்தத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். இது தொடர்பாகவும் மாணவரை வழிப்படுத்தவும்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடுகளைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படி 4 :
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- வீட்டில் விளக்கேற்றமுன் நாம் செய்ய வேண்டியவை,
  1. வீட்டினைக் சுத்தம் செய்தல்
  2. வீட்டிற்குள்ளும் வெளியிலும் மஞ்சள் அல்லது சாணம் தெளித்தல்.
  3. சுவாமிக்குத் தண்ணீர் வைத்தல்.
  4. மலர் கொய்து வைத்தல், மாலைக்கட்டி சுவாமிப் படங்களுக்கு சாத்துதல்.
- வீட்டில் வழிபாடு செய்யும் போது,
  1. தீபம் காட்டுதல் வேண்டும்
  2. தூபமிடுதல் வேண்டும்.
  3. வீட்டு நன்மைக்காகவும், ஊர் நன்மைக்காகவும், உலக நன்மைக்காகவும பிரார்த்தனை செய்தல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 1.1.1 இல் உள்ள சுவாமிப் படங்கள்
இணைப்பு 1.2.2 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்
டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல் பொருத்தமான தர உள்ளீடுகளை தெரிவு செய்து பயன்படுத்தவும்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- எமது சைவப் பழக்கவழக்கங்களை அறிந்து குறிப்பிடுவர்.
- அவற்றை நாளாந்தம் தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.
- இறைவன் உறையும் எல்லா இடங்களையும் சுத்தமாக வைத்திருப்பர்.
- வீட்டு நன்மைக்காகவும், ஊர் நன்மைக்காகவும்,உலக நன்மைக்காகவும பிரார்த்தனையில் ஈடுபடுவர்
- கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர்.

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள். அதிலுள்ள செயற்பாடுகளை வகுப்பறையில் செய்து காட்டுங்கள். அதனை ஒவ்வொரு நாளும் வீட்டில் கடைபிடியுங்கள்.

குழு 1

1. வீட்டில் விளக்கேற்றமுன் நாம் செய்ய வேண்டியவை எவையெனக் குறிப்பிடுங்கள்.
2. நீங்கள் குறிப்பிட்ட விடயங்களை உங்கள் வகுப்பறையில் சுவாமிப்படம் வைத்திருக்கும் இடத்தில் செய்துகாட்டுங்கள்.
3. பின்னர் விளக்கினை ஏற்றி வழிபாட்டில் ஈடுபடுங்கள்.

குழு 2

1. வீட்டில் இறைவழிபாடு செய்யப்படும் முறையினைக் குறிப்பிடுங்கள்.
2. நீங்கள் குறிப்பிட்ட முறையினை உங்கள் வகுப்பறையில் சுவாமிப்படம் வைத்திருக்கும் இடத்தில் செய்துகாட்டுங்கள்.

குழு 3

1. இறைவழிபாட்டின் போது ஓதுதற்காக, நீங்கள் இதற்கு முன்னர் அறிந்து வைத்துள்ள பஞ்சபுராணத்தினை ஒழுங்கு முறையில் தயார் செய்து காட்டுங்கள்.
2. குழு 2, உங்கள் வகுப்பறையில் வைத்திருக்கும் சுவாமிப்படங்களின் முன் பூசையை செய்துக் காட்டியதும் அந்த பஞ்சபுராணங்களை ஓதிக்காட்டுங்கள்.

குழு 4

1. இறைவனுக்கு ஒப்பாக எம்மோடு வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் யாவர் என்பதைக் குறிப்பிடுங்கள்.
2. குருவும் பெற்றோருக்குச் சமமானவர்கள் என்பதால் உங்கள் பாடசாலையில் பணிபுரியும் மூத்த ஆசிரியர்கள் இருவரை வகுப்புக்கு அழைத்து வந்து அவர்களை வழிபடுங்கள். ஏனைய மாணவர்களையும் வழிபட உதவுங்கள்.
3. இச் செயற்பாட்டினை தினமும் வீட்டிலும் பாடசாலையிலும் செய்யுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1……………………………………………………………………………………………

   2……………………………………………………………………………………………

   3……………………………………………………………………………………………

   4……………………………………………………………………………………………

   5……………………………………………………………………………………………

2. பெற்றோருக்கானது - வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள்
   காலையும் மாலையும் விளக்கேற்றி வழிபட பழக்கப்படுத்தவும், காலையும் மாலையும் பெற்றோரின் காலில் விழுந்து வணங்க வழிப்படுத்தல் வேண்டும்,வழிபாட்டின் போது திருமுறைப்பாடல்களை பாடச் செய்தல். இவைகளை மாணவர்கள் தொடர்ச்சியாக செய்து வருகின்றனரா என்பதை அவதானித்து அவற்றுக்கு ஏற்ப பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : தமது வாழ்வில் நாளாந்த செயற்பாட்டில் இறைசிந்தனையுடன் ஈடுபடுவர்.'

**செயற்பாடு** : **விசேட தினங்களின் போது வீட்டில் சைவ நடைமுறைகளைப் பேணுவோம்.**

**நேரம்** : 01 பாடவேளை

**கற்றற் பேறுகள்:**

- வீட்டில் சைவ நடைமுறைகளைக் கடைப்பிடிப்பர்.
- தினசரி வீட்டு முற்றத்தில் கோலம் போடுவர்.
- இறைவன் உறையும் எல்லா இடங்களையும் சுத்தமாக வைத்திருப்பர்.
- கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1 :**

- மாணவர்கள் விசேட தினங்களில் வீடுகளில் கடைப்பிடிக்கும் சைவ நடைமுறைகளைக் கூற இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
- வீட்டில் விசேட தினங்களில் சைவ நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
  - கோலம் போடுதல், தோரணம் கட்டுதல்
  - மாவிலை கட்டுதல் , நிறைகுடம் வைத்தல்
  - கைவிசேடம் பரிமாறுதல்
  - மருத்து நீர் தேய்த்தல்
  - புத்தாடை அணிதல்

**படி 2 :**

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எனணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.2.2 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3 :**

- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- இது கடவுள் வழிபாட்டுடன் தொடர்புடைய செயற்பாடு என்பதால், வகுப்பறைச் சுத்தத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். இது தொடர்பாகவும் மாணவரை வழிப்படுத்தவும்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடுகளைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படி 4 :
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- நிறைகுடம் வைத்தலுக்குத் தேவையான பொருட்கள்
  - நெல், வாழையிலை, குடம், தேங்காய்
  - மாவிலை, குத்துவிளக்கு (திரி 3 அல்ல 5) வெற்றிலை, பாக்கு, பழம்,பூ, பிள்ளையார் உருவம் (சாணம்,மஞ்சள்,அறுகு)
  - மஞ்சள் நீர்
  - கோலம் போடுதலுக்கு அரிசிமா பயன்படுத்தப்படுகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 1.2.2 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
- நிறைகுடம் வைத்தலுக்கு தேவையான பொருட்கள்
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**
பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- விசேட தினங்களில் நாம் கடைப்பிடிக்கும் சைவ நடைமுறைகளை அறிந்து குறிப்பிடுவர்.
- அவற்றை விசேட தினங்களின் போது தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.
- தினசரி வீட்டு முற்றத்தில் கோலம் போடுவர்.
- இறைவன் உறையும் எல்லா இடங்களையும் சுத்தமாக வைத்திருப்பர்.
- கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர்.

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.2.2**

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள். அதிலுள்ள செயற்பாடுகளை வகுப்பறையில் செய்து காட்டுங்கள். அதனை ஒவ்வொரு நாளும் வீட்டில் கடைபிடியுங்கள்.

**குழு-1 கும்பம் வைத்தல்**

1. நிறைகுடம் வைத்தலுக்குத் தேவையான பொருட்களைக் குறிப்பிடுங்கள்.
2. உங்கள் வகுப்பறையில் பூரண நிறைகுடம் வைத்தலை உரியவாறு செய்து காட்டுங்கள்.

**குழு-2 கோலம் போடுதல்.**

1. கோலம் போடுதற்குத் தேவையான பொருட்களைக் குறிப்பிடுங்கள்.
2. உங்கள் வகுப்பறை முற்றத்தில் அழகிய கோலம் ஒன்றினை இட்டுக் காட்டுங்கள்.

**குழு-3 மாவிலை, தோரணம் கட்டுதல்**

1. மாவிலை, தோரணம் என்பவற்றை உங்கள் வகுப்பறைச் சூழலில் முறையாக அமைத்துக் காட்டுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1……………………………………………………………………………………………

   2……………………………………………………………………………………………

   3……………………………………………………………………………………………

2. பெற்றோருக்கானது - வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள்
   காலையும் மாலையும் விளக்கேற்றி வழிபட பழக்கப்படுத்தவும், காலையும் மாலையும் பெற்றோரின் காலில் விழுந்து வணங்க வழிப்படுத்தல் வேண்டும்,வழிபாட்டின் போது திருமுறைப்பாடல்களை பாடச் செய்தல். இவைகளை மாணவர்கள் தொடர்ச்சியாக செய்து வருகின்றனரா என்பதை அவதானித்து அவற்றுக்கு ஏற்ப பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 :** நாளாந்த செயற்பாடுகளில் அவதானமாக ஈடுபடுவோம்.

**செயற்பாடு : எமது வாழ்க்கையை சமய ஒழுகலாறுகளுடன் ஒன்றிணைத்து வாழ்வோம்.**

**நேரம் :** 04 பாடவேளை

**கற்றற் பேறுகள்:**

- சமய ஒழுகலாறுகள் நாளாந்த வாழ்வையும் செம்மைப்படுத்தும் என்பதை விளங்கிக் கொள்வர்.
- இவை உள, உடல், சமூக ஆரோக்கியத்திற்கும் அவசியமானவை என்பதை ஏற்றுக்கொள்வர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1 :**

- மாணவர்கள் நாளாந்தம் சமய ஒழுகலாறுகளை வீட்டில் கடைப்பிடிக்குமாற்றினைக் கூற இடம் வழங்குங்கள்.
- அவற்றினால் அவர்கள் அடையும் பயன்கள், அவற்றின் தேவை என்பவற்றை எடுத்துக்கூற சந்தரப்பம் வழங்குங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - புறத்தூய்மை அகத்தூய்மைக்கு வழிவகுக்கும்.
  - இறைசிந்தனையை வளர்க்கும்.
  - நற்குணங்கள் விருத்தியடையும்.
  - தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்குமான நல்லுறைவை

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.3.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)

**படி 3 :**

- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- இது கடவுள் வழிபாட்டுடன் தொடர்புடைய செயற்பாடு என்பதால், வகுப்பறைச் சுத்தத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். இது தொடர்பாகவும் மாணவரை வழிப்படுத்தவும்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாடுகளைச் செய்து காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4 :**

- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - தினமும் நீராடுதல், வீட்டையும் சூழலையும் சுத்தமாக வைத்திருத்தல்.
  - இறைவனுக்கு விளக்கேற்றி வழிபடுதல்
  - சிவசின்னங்களைத் தரித்தல்.
  - தமக்காகவும் பிறருக்காகவும் பிரார்த்தித்தல்.
  - ஓற்றுமையாக வாழ்தல்.
  - இன்சொல் பேசுதல்.
  - பறவைகள் விலங்குகளுக்கு உணவு வழங்குதல் நற்செயல்களை செய்தல்

**தர உள்ளீடுகள்** : - இணைப்பு 3.3.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்

**கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- நாளாந்த வாழ்வில் முக்கியத்துவம் பெறும் ஒழுகலாறுகளைக் கூறுவர்.
- அவற்றின் பயன்களைக் கூறுவர்.
- அவை சமூக நல்வாழ்விற்கும் அவசியமானவை என்பதை விளங்கிக் கொள்வர்.
- தமது நடைமுறை வாழ்வில் அவற்றை கடைப்பிடிக்கப் பழகுவர்.

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம் இணைப்பு 1.3.1**

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

**குழு 01, 03**

- சைவசமயி ஒருவர் நாளாந்தம் கடைப்பிடிக்க வேண்டிய சமய பழக்கவழக்கங்கள் யாவை?
- அச் செயற்பாடுகளில் பிறருக்கு நம்மை விளைவிப்பவை எவை?
- பகிர்ந்துண்ணல் என்னும் பண்பை வளர்ப்பதற்காக உமது வகுப்பறையில் நீங்கள் செய்யக்கூடிய செயற்பாடு ஒன்றை எவ்வாறு திட்டமிடுவீர்கள் என்பதற்கான முன்னாயத்தம் ஒன்றை எழுதி அறிக்கைப்படுத்துங்கள்.

**குழு 02, 04**

பகிர்ந்துண்ணல் என்னும் பண்பை வளர்ப்பதற்காக உமது வகுப்பறையில் நீங்கள் செய்யக்கூடிய செயற்பாடு ஒன்றை எவ்வாறு திட்டமிடுவீர்கள் என்பதற்கான முன்னாயத்தம் ஒன்றை எழுதி அறிக்கைப்படுத்துங்கள்.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1……………………………………………………………………………………………

   2……………………………………………………………………………………………

   3……………………………………………………………………………………………

   4……………………………………………………………………………………………

   5…………………………………………………………i………………………………………

2. பெற்றோருக்கானது - வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள்
   தினமும் நீராடுதல், வீட்டையும் சூழலையும் சுத்தமாக வைத்திருத்தல். இறைவனுக்கு விளக்கேற்றி வழிபடுதல் சிவசின்னங்களைத் தரித்தல். தமக்காகவும் பிறருக்காகவும் பிரார்த்தித்தல். ஓற்றுமையாக வாழ்தல். இன்சொல் பேசுதல். என்பவற்றை செய்து வருகின்றனரா என்பதை அவதானித்து அவற்றுக்கு ஏற்ப பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0** : **தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 1.3** : சமூகம் சார்ந்த சமய விழுமியங்களை அறிந்து போற்றுவோம்..

**செயற்பாடு** : **எமது அன்றாட வாழ்வில் சமய விழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவோம்.**

**நேரம்** : 04 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்:**

1. சமூகம் சார் விழுமியங்கள் வாழ்வை உயர்த்தும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
2. சமூகம் சார் சமய விழுமியங்கள் ஒருவரை நல்ல மனிதராக வாழ வழிகாட்டும் என்பதை ஏற்று அதன்வழி ஒழுகுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1 :**

- சமூகம் சார் சமய விழுமியங்களை மாணவர்கள் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள். மாணவர்கள் கடைப்பிடிக்கும் சமூகம் சார் விழுமியங்களை எவ்வாறு பழகி அவற்றை வழக்கமாக்கி கொண்டுள்ளனர் என்பதனை ஆதாரத்துடன் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
    - உண்மை பேசுதல் உத்தமர்களின் பண்பாகும்.
    - பெரியோரைக் கனம் பண்ணுதல் எமது கடமை ஆகும்.
    - நன்றி மறவாமை மனிதரின் நற்பண்பாகும்.
    - தருமம் செய்தல் தயாளகுணத்தை வளர்க்கும்.
    - இத்தகைய நல்லொழுக்கங்கள் யாவும் சமூகத்தில் எமக்கு நன்மதிப்பையும் நற்பெயரையும் பெற்றுக் கொடுக்கும்

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.3.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3 :**

- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள். செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4 :**

- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- சமூகம்சார் சமய விழுமியப் பண்புகளில் உண்மை பேசுதலும் ஒன்றாகும்.
- நீதி நூல்கள் சமய விழுமியக் கருத்துக்களை வற்புறுத்துகின்றது. திருக்குறள் உண்மைப் பேசுவதை அறிவுறுத்துகிறது.
- சைவவிழுமியப் பண்புகளில் பெரியோரைக் கனம் பண்ணுதலும் ஒன்றாகும்.
- பெரியோரின் நல்லாசிகள் எமக்கு நல்வாழ்வை வழங்கும்.
- நன்றி மறவாமை விழுமியப் பண்புகளில் ஒன்றாகும். இப்பண்பானது மனமிகிழ்ச்சியை ஏற்படுத்தும்.
- தருமம் செய்தல் தயாள குணத்தை வளர்க்கும் சைவ விழுமியப் பண்பாகும். தருமம் செய்தல் எமக்கு நல்வாழ்வை ஏற்படுத்தும்.

**தர உள்ளீடுகள் :** - மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமை கடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்
- ஆத்திசூடி, திருக்குறள், வாக்குண்டாம் போன்ற நூல்கள்
- சிறிய கதைகள்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சமூகம்சார் சமய விழுமியங்களை ஏற்று ஒழுகுவர்.
- ஒவ்வொரு விழுமியமும் வாழ்க்கைக்கு உதவுமாற்றினையும் பயன்தருமாற்றினையும் எடுத்துக்கூறுவர்.
- விழுமியங்கள் சமூக வாழ்வை உயர்த்தும் என அறிந்து வாழ்வில் கடைப்பிடிப்பர்.

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள்.

**குழு 01 உண்மை பேசுதல்**

- உண்மை பேசுதலின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.
- உண்மை பேசுவதனால் ஏற்படும் நன்மைகள் எவை.
- உண்மை பேசி பாராட்டுப் பெற்ற சந்தர்ப்பங்களை தருக.

குழு 02

- நன்றி மறவாமை என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- இக்கதையில் வரும் கதா பாத்திரங்களைக் குறிப்பிடுங்கள்.
- மைனா தன் நன்றியுணர்வினை எவ்வாறு காட்டியது?
- தேவேந்திரன் மைனாவுக்கு கொடுத்த வரம் என்ன?
- இக்கதையை சுவைபட எடுத்து சுருக்கிக் கூறுங்கள்.

குழு 03 நன்றி மறவாமை (பின்னிணைப்பு கதை 3)

- தருமம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- இக்கதையில் வரும் கதா பாத்திரங்களைக் குறிப்பிடுங்கள்.
- கர்ணனின் எப்பண்பு இங்கு குறிப்பிடப்படுகின்றது?
- இக்கதையினை அடிப்படையாகக் கொண்டு அப்பண்பு காணப்படும் இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுங்கள்.
- இக்கதையைச் சுவைபட எடுத்துக் கூறுங்கள்.

குழு 04 **பெியோரைக் கனம் பண்ணுதல்.**

- பெரியோரைக் கனம் பண்ண வேண்டியதன் அவசியம் யாது.
- பெரியோரைக் கனம்பண்ணும் சந்தர்ப்பங்களை தருக.
- பெரியோரைக் கனம்பண்ணுவதால் நாம் பெறும் நன்மைகள் யாவை.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1………………………………………………………………………………………

   2………………………………………………………………………………………

2. பெற்றோருக்கானது - வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள்

   தினமும் உன்மை பேசுதல், நன்றி பாரட்டதல், தருமம் செய்தல் என்பவற்றை அவதானித்து அவற்றுக்கு ஏற்ப பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

பின்னிணைப்பு 3

## நன்றி மறவாமை

ஒரு காட்டில் வேடன் ஒருவன், வேட்டையாடுவதற்காக மானைத் துரத்திக் கொண்டு போனான். அவன் கையில் விஷம் தோய்த்த அம்பு இருந்தது. வில்லில் அந்த அம்பைப் பொருத்தி மானைக் குறி பார்த்தான். காற்றைக் கிழித்துக் கொண்டு பாய்ந்தது அம்பு. அந்த மானுக்கு அதிர்ஷ்டம். சடக்கென நகர்ந்து தப்பித்தது. ஆனால் அந்த அம்பு, அருகில் இருந்த பழங்கள் நிறைந்த ஒரு மரத்தில் போய்க் குத்தி நின்றது. விஷம் தோய்ந்த அம்பாயிற்றே... விஷம் அந்த மரத்தில் ஏறிற்று. பழங்கள் எல்லாம் கருகிக் கீழே உதிர்ந்தன. காய்கள் வெம்பின. இலைகள் சிதறின. ஆமாம். அந்த மரமே ஒரே நாளில் பட்டுப் போயிற்று. அந்த மரத்தின் பொந்தில் ஒரு மைனா வெகுகாலமாக வசித்து வந்தது. விஷ அம்பினால் மரத்துக்கு நேர்ந்த கதியைப் பார்த்த மைனா கலங்கிப் போனது. ஆனால் வளமான வேறு மரத்திற்குச் சென்று குடியேற அதற்கு மனம் வரவில்லை. மரத்தின் மேல் உள்ள பற்றினால் நன்றி உணர்வோடு அங்கேயே இருந்தது. பழங்கள், காய்கள் இல்லாததால் மைனாவுக்கு உணவு கிடைக்கவேயில்லை. களைத்துப் போனது. ஆனாலும் தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. மரம் சுகப்பட்டபோது தானும் சுகப்பட்டு, மரம் துயரப்படும் பாது தானும் துயரப்படும் மைனாவின் நேயத்தைப் பார்த்தான் தேவேந்திரன்.

மைனாவே எதற்காக இங்கே இருந்து கஷ்டப்படுகிறாய். வேறு மரத்திற்குப் போக வேண்டியதுதானே? என்றான். இல்லை, தேவேந்திரா! ஏராளமான நல்ல குணங்கள் கொண்ட இந்த மரத்தில்தான் நான் பிறந்தேன். இதுநாள் வரை என்னைக் காப்பாற்றியது இந்த மரம் தான். எனக்கு சுவையான கனிகளைக் கொடுத்தது. எதிரிகள் வந்தால் நான் ஒளிந்து கொள்ள இடம் தந்ததும் இதுதான். நல்ல நிலையில் இதன் நிழலில் இருந்த நான், அதற்கு ஒரு கெட்டநிலை வந்ததும் ஓடி ஒளிவது தர்மம் இல்லையே என்றது. தேவேந்திரன் மெய் சிலிர்த்துப் போனான். மைனாவே உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் தருகிறேன் என்றான். மைனா கேட்டது, தேவர்களின் அரசனே, இந்த மரத்தைப் பழையபடி நன்கு செழித்து வளர அருள்புரிவாயாக என்றது. அப்புறம் என்ன? மரத்திற்கு மீண்டும் உயிர் வந்தது. இலைகள், காய்கள், கனிகள் என்று ஜொலித்தது மரம்! மகிழ்ந்தது மைனா. இதுபோலவே, நீங்களும் உங்களை வளர்த்தவர்களை மறக்காமல் நன்றியுடனும், மரியாதையுடனும் அவர்களிடம் இந்த மைனாவைப் போல் நடந்து கொள்ளுங்கள்.

பின்னிணைப்பு 4

## தருமம் செய்தல்

தருமத்தை செய்ய எப்போதும் விரும்ப வேண்டும் என்பது இதன் பொருள் தருமம் செய்வதற்கு பொருள் வேண்டுவது அவசியம்.பொரு ள் இல்லாவிட்டால் தருமம் செய்ய முடியாது என்றாலும் ஒருவனுக்கு அறஞ்செய்ய வேண்டும் என்னும் விருப்பம் மாத்திரம் இருக்குமானால் ஒரு காலத்தில் அவர் செய்த நல்வினைப்பயனால் பொருள் கிடைக்கின்ற சமயத்தில் அவர் தர்மம் செய்வார் என்பது நிச்சயம்.

ஆதலால் முதலில் அறத்தைச்செய்ய எல்லோருக்கும் விருப்பம் இருக்க வேண்டும். விருப்பம் உண்டானால் அதற்கான வழியும் ஏற்படும்!. ஒவ்வொருவரும் கஷ்டப்பட்டாகிலும் தர்மத்தை செய்ய முயற்சி செய்ய வேண்டும்.ஏனென்றால் தர்மம் நன்மையை உண்டாக்கும் சக்தியுடையது.

“தர்மமே ஜயம்“ “தர்மம் தலை காக்கும்“ என்னும் பழமொழிகளே தர்மத்தின் சிறப்பை எல்லோருக்கும் எடுத்துக் காட்டும். தர்மம் எப்படி தலைகாக்கும் என்பது பெரும்பாலும் நாம் அறிந்துதான் இருக்கிறோம். என்றாலும் இக்கதை அதைப் பற்றி மேலும் விவரிக்கின்றது.

குந்திபோசவம்ச ராஜனான சூரசேனனுக்கு குந்தி என்ற அழகிய மகள் இருந்தாள். .அவள் துர்வாச ரிஷியின் அனுக்கிரகத்தில் கிடைத்த மந்திர சக்தியால் தான் கன்னியாய் இருக்கும்போதே ஒரு ஆண்குழந்தைக்கு தாயானாள். இதனால் தன் குலத்திற்கு பழி நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காக பெற்ற குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து கங்கையில் விட்டு விட்டாள். ஆற்றில் மிதந்து சென்ற பெட்டியை அத்தினாபுரி மன்னரின் தேரோட்டி கண்டெடுத்து அக்குழந்தைக்கு கர்ணன் என்று பெயரிட்டு தன் குழந்தை போல வளர்த்து வந்தான்.

கர்ணன் அரசர்களுக்கு உரிய வில்வித்தை, யானை ஏற்றம், குதிரை ஏற்றம் என பலவற்றையும் கற்றுத்தேர்ந்து அதில் சிறப்புடன் விளங்கினான். இவனுடைய திறமைகளை அறிந்து பாராட்டிய அத்தினாபுர அரசகுமாரன் துரியோதனனுக்கும் இவனுக்கும் இடையே ஆழ்ந்த நட்பு உண்டானது. அந்த நட்பின் காரணமாய் துரியோதனன் கர்ணனை அங்கதேசத்திற்கு அரசனாக்கினான்.

கர்ணன் எப்போதும் தர்மம் செய்வதிலேயே நாட்டமுள்ளவன், யார் எதை கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் கொடுக்கும் மனமுடையவன். கொடையில் சிறந்தவன் கர்ணனே என்று எல்லோராலும் புகழ்ந்து பேசப்பட்டான. இவன் பிறந்தபோது கவச குண்டலங்களுடன் பிறந்தவன். அந்த கவசகுண்டலங்கள் இவனிடம் உள்ள அளவும் அவனை உலகத்தில் எவராலும் வெல்ல முடியாது.

இந்திரன் ஒரு முறை மாறுவேடம் கொண்டு கர்ணனிடம் வந்து அவனுடைய கவச குண்டலங்களை கேட்க கர்ணன் தன் உயிருக்கு உயிரான அவற்றையும் மனக்களிப்புடன் தானம் செய்தான்.

துரியோதனனுக்கும் பாண்டவர்களுக்கும் உண்டான மகாபாரத யுத்தத்தில் கர்ணன் தனது உயிர்த்தோழனான துரியோதனனுக்கு துணைவனாய், அவன் சேனைக்குத் தலைவனாய் பேருதவி புரிந்தான்.

அப்பொழுது சேனாதிபதியான கர்ணனுக்கும், பாண்டவ வீரனான அருச்சுனனுக்கும் பெரும்போர் நடந்தது. போர்க்களத்தில் அடுத்தடுத்து அருச்சுனன் விட்ட அம்புகள் பாய்ந்ததில் அடிபட்டு மூர்ச்சித்து ரதத்தில் விழுந்து விட்ட கர்ணனைக் காப்பாற்றும் பொருட்டு அவன் இத்தனைநாளும் செய்த தருமத்தின் பலனாக தருமதேவதை அவனிருந்த ரதத்திற்கு முன் வெளிப்பட்டு நின்று அருச்சுனன் கணக்கில்லாமல் சொரிந்த அம்புகூட்டங்களையெல்லாம் கர்ணன் மேல் படாமல் விழுங்கி நின்றாள்.

அருச்சுனனும் அம்பு போட்டு போட்டு கை அசந்து போய் விட்டான். இதையெல்லாம் கண்டு நின்ற பலரும் தர்மம் தலைகாத்து நிற்பதை பார்த்து வியந்து கர்ணனை புகழ்ந்தனர்.

அப்போது தர்மம் ஜெயித்து நிற்பதையும், அருச்சுனன் தோற்றத்தையும் அறிந்த கிருஷ்ணன் ஒரு சாதாரண மனிதனைப் போன்ற கோலத்தில் மயங்கி சரிந்து கிடக்கும் கர்ணனிடம் போய் அவன் செய்துள்ள தர்மத்தின் பலன் முழுவதையும் தானமாக கொடுக்க வேண்டினான்.

சாகுந்தறுவாயில் கிடக்கும் கர்ணன் இந்த நிலையிலும் தர்மம் செய்ய சமயம் வாய்த்ததே அதுவும் தர்மமாக கேட்கும் பொருளும் தன்னிடம் இருக்கிறதே என்று மிக மகிழ்ச்சியோடு தன் தருமத்தின் பலனையெல்லாம் தானம் கொடுத்து விட்டான். அதன் பிறகுதான் கர்ணனை அருச்சுனனால் கொல்ல முடிந்தது. தர்மம் உள்ளவரை அவனை கொல்ல முடியவில்லை.

தருமமே ஜயம். அறம் செய விரும்பு. தருமம் தலை காக்கும்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : வாழ்வியல் மேம்பாட்டிற்காக சடங்குகளையும் விரதங்கள் பண்டிகைகளையும் அறிந்து அவற்றை முறைப்படி கடைப்பிடிக்கும் முறையை இனங்காட்டுவர்.

**செயற்பாடு** : **வாழ்வியற் சடங்குகளைப் பின்பற்றுவோம்**

**நேரம்** : 04 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** : வாழ்வியற் சடங்குகளை அறிந்து தம் வாழ்விற் கடைப்பிடிப்பர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1 :**

- மாணவர்களுக்குத் தெரிந்த வாழ்வியற் சடங்குகளைக் கூற அவர்களுக்கு இடமளியுங்கள்.
- அது வாழ்வில் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களைக் கூற மாணவர்களுக்கு இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
- மக்கள் வாழ்வுடன் தொடர்புபடும் சடங்குகள் வாழ்வியல் சடங்குகள் எனப்படும்.
- வாழ்வியல் சடங்குகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை நாம் கடைப்பிடித்தல் வேண்டும்.
- வாழ்வியல் சடங்குகளினூடாக சமய, சமூக உணர்வுகள் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

**படி 2 :**

- மாணவர்களை சில குழுக்களாகப் பிரியுங்கள். (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.4.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)

**படி 3 :**

- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படி 4 :
- குழுக்கள் முன்வைத்த விடயங்களின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- குழுக்கள் முன்வைத்த விடயங்களின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- மனித வாழ்வின் மேம்பாட்டிற்காக குழந்தையொன்று பிறந்த பின் செய்யப்படும் சடங்குகள் வாழ்வியற் சடங்குகளாகும்.
- இவற்றுள் முக்கியமானவையாக பெயர் சூட்டுதல், சோறூட்டுதல், ஏடுதொடக்கல் என்பன காணப்படுகின்றன.
- இவை நமது வாழ்வை வளப்படுத்தும் முக்கியமான சமயச் சடங்குளாகும்.
- வாழ்வியற் சடங்குகளை நாம் கடைப்பிடிப்பதோடு, அவற்றை எதிர்காலச் சந்ததியினருக்கும் கையளிக்க வேண்டும்.

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- வாழ்வியற் சடங்குகள் மூன்றினை அறிந்து, அவற்றினைக் குறித்துக் காட்டுவர்.

- மனித வாழ்க்கைக்கும் வாழ்வியற் சடங்குகளுக்கும் இடையிலான தொடர்பினைக் குறிப்பிட்டு, அவற்றைத் தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.
- வாழ்வியற் சடங்குகளுக்கு மதிப்பளித்து, தம் வாழ்வில் தவறாது பேணுவர்.
- கூட்டுறவு மனப்பாங்குடன் செயற்படுவர்.

**செயற்பாட்டுப் பத்திரம்** **இணைப்பு 1.4.1**

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடி சேகரித்து முன்வையுங்கள். அதிலுள்ள செயற்பாடுகளை வகுப்பறையில் செய்து காட்டுங்கள். அதனை வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்துங்கள்.

குழு - 01

"பெயர்சூட்டுதல்" தொடர்பான தகவல்களை, பின்வரும் அடிப்படையில் சேகரித்து, அதனை **நாடக வடிவில்** முன்வைக்குக.

1. இடம்பெறும் காலம்.
2. செயல் ஒழுங்குகள்.
3. நிகழ்வை நடாத்திவைப்பவர்
4. நிகழ்வு நடைபெறும் இடங்கள்
5. கலந்து கொள்வோர்.

குழு - 02

“சோறூட்டுதல்” தொடர்பான தகவல்களை, பின்வரும் அடிப்படையில் சேகரித்து, அதனை **வில்லிசை** வடிவில் முன்வைக்குக.

1. இடம்பெறும் காலம்.
2. செயல் ஒழுங்குகள்.
3. நிகழ்வை நடாத்திவைப்பவர்
4. நிகழ்வு நடைபெறும் இடங்கள்
5. கலந்து கொள்வோர்.

குழு - 03

“ஏடு தொடக்கல்” தொடர்பான தகவல்களை, பின்வரும் அடிப்படையில் சேகரித்து, அதனை **பிரசங்க வடிவில்** முன்வைக்குக.

1. இடம்பெறும் காலம்.
2. செயல் ஒழுங்குகள்.
3. நிகழ்வை நடாத்திவைப்பவர்
4. நிகழ்வு நடைபெறும் இடங்கள்
5. கலந்து கொள்வோர்.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

    1………………………………………………………………………………………

    2………………………………………………………………………………………

    3………………………………………………………………………………………

    4………………………………………………………………………………………

2. பெற்றோருக்கானது - வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள்
    வாழ்வியல் சடங்குகளினூடாக சமய, சமூக உணர்வுகள் கட்டியெழுப்பப்பட வேண்டும். அவ்வாறான சமய சமூக உறவுகளை பிள்ளைகளுக்கு எடுத்துரைத்து அவற்றை தொடர்ச்சியாக பின்பற்றுகிறார்களா என்பதை அவதானித்து அவற்றுக்கு ஏற்ப பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : வாழ்வியல் மேம்பாட்டிற்காக சடங்குகளையும் விரதங்கள் பண்டிகைகளையும் அறிந்து அவற்றை முறைப்படி கடைப்பிடிக்கும் முறையை இனங்காட்டுவர்.

**செயற்பாடு** : **பண்டிகைகளைக் கொண்டாடுவோம் விரதங்களை அனுட்டிப்போம்**

**நேரம்** : 03 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- 1. பண்டிகைகளை முறைப்படி கொண்டாடுவர்.
  2. விரதங்களை அனுட்டிப்பர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்** :

**படி 1:**

- மாணவர்கள் தம் வாழ்வில் கொண்டாடும் பண்டிகைகளையும் அனுட்டிக்கும் விரதங்களையும் கூற இடமளியுங்கள்.
- அது வாழ்வில் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களைக் கூற மாணவர்களுக்கு இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - சித்திரை வருடப்பிறப்பு
    தைப்பொங்கல்
  - தீபாவளி
  - விரதங்களின் வகைகள்
  - சிவவிரதம்
  - சக்தி விரதம்
  - விநாயகர் விரதம்
  - முருக விரதம்

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள். (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 1.4.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)

**படி 3 :**

- குழுத் தேடலுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

-

படி 4 :
- குழுக்கள் முன்வைத்த விடயங்களின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- சமயம் சார்ந்தும் வாழ்வியல் சார்ந்தும் வருடந்தோறும் கொண்டாடப்படும்
- விசேட தினங்கள் பண்டிகைகள் எனப்படும்.
  இறைவனை மனம், மொழி, மெய் ஆகியவற்றால் விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதம் எனப்படும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : மாதிரி செயற்பாட்டுப் படிவம்
டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**
பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- பண்டிகைகளை அறிந்து, அவற்றினைத் தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.
- விரதங்களை அறிந்து அவற்றைத் தம் வாழ்வில் அனுட்டிப்பர்.
- பண்டிகைகள் ஊடாக தமது சமய இருப்பை உறுதி செய்வர்.
- கூட்டுறவு மனப்பாங்குடன் செயற்படுவர்.

**இணைப்பு 1.4.1 மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடிச் சேகரித்து முன்வையுங்கள்.

குழு – 01,03

- பின்வருவனவற்றிற்குரிய விடயங்களைத் தேடி கலந்துரையாடி எழுதுங்கள்.
  பண்டிகைகள் என்பதன் விளக்கம்
- நாம் கொண்டாடும் பண்டிகைகள் மூன்று எழுதுங்கள்
- பண்டிகைகளின் போது நாம் செய்யும் விடயங்களை எழுதுங்கள்.

குழு – 02,04

பின்வருவனவற்றிற்குரிய விடயங்களைத் தேடி கலந்துரையாடி எழுதுங்கள்.

- விரதம் என்பதன் விளக்கம்
- ☐ நாம் அனுஷ்டிக்கும் விரதங்கள் மூன்று எழுதுங்கள்
- ☐ விரதங்களின் போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகளை எழுதுங்கள்.

**ஆசிரியருக்கானது**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

   1……………………………………………………………………………………

   2……………………………………………………………………………………

   3……………………………………………………………………………………

   4……………………………………………………………………………………

2. பெற்றோருக்கானது - வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள்
   விரதம், பண்டிகைக் காலங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகளை உரிய முறையில் கடைப்பிடிக்கின்றனரா என்பதை அவதானித்து அவற்றுக்கு ஏற்ப பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : பக்தி இறை நம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து அதனைத் தமது வாழ்வில் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 :** சமய நூல்களையும் அவற்றின் பக்தி வெளிப்பாட்டினையும் அறிந்து வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு : திருமுறைகளில் இறைவன் பெருமைகளை அறிந்து தமது வாழ்வில் பக்தியுடன் பதிகங்களைப் பாடி மதிப்பளிப்பர்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு :** திருமுறைகள் இறைநூல் என்பதனை அறிந்து மதிப்பளிப்பர்.
திருமுறைகளைப் பக்தியுடன் பாடுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1 :**
- மாணவர்கள் திருமுறை பற்றி அறிந்த விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.
- திருமுறைப் பாடல்களின் சிறப்பினை பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- மாணவர்கள் விரும்பிய ஒரு திருமுறைப்பாடலைப் பண்ணோடு பாடுமபடி கூறுங்கள்.
- திருமுறைகள் தெயவீகத் தன்மை கொண்டவை
- இறைவனின் இருப்பை திருமுறைகள் காட்டியமையினால் அவை தொகுக்கப்பட்டன.

**படி 2 :**
- மாணவர்களைக் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்
ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறுங்கள். (செயற்பாட்டுப் பத்திரம் திருமுறைகளின் சிறப்பு தொகுப்பு, பயன் என்பவற்றினை மாணவர்கள்எவ்வாறு தெளிவு பெற்றனர் என்பதனை அறியும் வகையில் அமைதல் வேண்டும்)

**படி 3 :**
- மாணவர்கள் குழுக்களாக இயங்கிச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள். -
சகல மாணவர்களுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு ஊக்குவிப்பு வழங்குங்கள். -
தேவை ஏற்படுமிடத்து மாணவர்களுக்கு ஆலேசனை வழங்கி வழிகாட்டுங்கள்.

**படி 4:**
- ஒவ்வொரு குழுவில் இருந்தும் ஒருவர் அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
முன்வைத்த கருத்துக்கள் தொடர்பாக ஏனைய குழுக்கள் கருத்துக்கள் வழங்க இடமளியுங்கள். -
மாணவர்கள் கருத்துக்களை முன்வைக்க இடர்படும் போது, தெளிவான விளக்கம் அறிந்து நெறிப்படுத்துங்கள். -
வரவேற்கத்தக்க கருத்துக்களுக்குப் பாராட்டு வழங்குங்கள்.

- பின்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்
  - தெய்வீகத்தன்மைவாய்ந்த திருப்பாடல்களை ஒழுங்குபடுத்தி தொகுக்கப்ட்ட தொகுதியே திருமுறை எனப்படும்
  - திருமுறைகளின் தொகுப்பை இராஜராஜ சோழன் என்னும் மன்னன் நம்பியாண்டார் நம்பி மூலம் தொகுப்பித்தார்.
  - தில்லையில் மூடி வைக்கப்பட்டிருந்த தேவாரத் திருப்பதிகங்களை தில்லைவாழ் அந்தணரின் வேணடுகோளுக்கினங்க மூவர் (சம்பந்தர், அப்பர், சுந்தரர்) சிலை எழுந்தருளச் செய்து நம்பியாண்ட நம்பி திருப்பதிக ஏடுகளைப் பெற்றுத் தொகுத்தார்.
  - திருமுறைகளைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவதன் மூலம் நாம் இறை அருளைப் பெற முடியம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம் டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

**படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- திருமுறையின் சிறப்பினைக் கூறுவர்.
- திருமுறைகளைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர்களை எழுதுவர்.
- திருமுறைகள் தொகுக்கப்பட்டதன் நோக்கம் பற்றி எழுதுவர்.
- திருமுறைகள் தொகுத்த வரலாறு பற்றி குறிப்பிடுவர்.
- திருமுறைகளைப் பாடுவதனால் பெறும் பயன்கள் இரண்டினைக் கூறுவர்.

**செயற்பாட்டுப் பத்திரம் (இணைப்பு 01)**

**திருமுறைகளின் தொகுப்பும் பெருமையும்**

குழு 01

1. ஆலயங்களில் நீங்கள் பக்தியுடன் பாடும் இரண்டு திருப்பதிகங்கள் எழுதுங்கள்.
2. திருமுறைகள் பாடுவதனால் பெறும் பயன்கள் இரண்டு தருக.
3. திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?

குழு 02

1. திருமுறைகள் ஏன் தொகுக்கப்பட்டன?
2. திருமுறைகள் பாடப்பட்ட சந்தர்ப்பங்கள் மூன்று தருக.
3. திருமுறை என்ற சொல்லின் பொருள் யாது?

குழு 03

1. திருமுறைகளின் சிறப்புக்கள் இரண்டு எழுதுக.
2. இராஜராஜன், நம்பியாண்டார்நம்பி ஆகியோரின் இச்செயல் எமக்கு உணர்த்தும் விழுமியப் பண்புகள் இரண்டு எழுதுக.
3. திருமுறைகள் எழுதிய ஏடுகளைப் பெறுவதற்கு தில்லைவாழ் அந்தணர்களால் குறிப்பிட்ட மூவர் யாவர்?

**ஆசிரியருக்கானது**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

   1……………………………………………………………………………………

   2……………………………………………………………………………………

   3……………………………………………………………………………………

   4……………………………………………………………………………………

2. பெற்றோருக்கானது - வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள்

   பிள்ளைகள் நாள்தோறும் இறைவழிபாட்டின் போது திருமுறைப்பாடல்களை உரிய முறையில் பாடுகின்றனரா என்பதை அவதானித்து மனனம் செய்து தினமும் பாடும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : பக்தி இறை நம்பிக்கையின் சாதனம் என்பதனை உணர்ந்து அதனைத் தமது வாழ்வில் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 :** நாயன்மாரின் வரலாறுகளினூடாக அவர்களது இறை நம்பிக்கையையும் பக்தி உணர்வினையும் அறிந்து அவற்றின் வழி ஒழுகுவர். பக்தியின் சிறப்பினை எடுத்துரைப்பர்.

**செயற்பாடு :** **நாயன்மார்களின் பக்தி வெளிப்பாட்டினையும் சிவனடியார் வழிபாட்டின் சிறப்பினையும் இளையான்குடிமாற நாயனார் கதைமூலம் அறிந்து சிவனடியார்களை போற்றுவோம்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**
- சிவனடியார்களைசிவன் எனப் போற்றி வணங்குவர்.
- சிவனடியார்களை அன்போடு அமுதளித்து உபசரிப்பர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- மாணவர்கள் நாயன்மார்கள் பற்றி அறிந்த விடயங்களை கூற இடமளியுங்கள்.
- சம்பந்தர், அப்பர் இறைவன் மீது பாடிய முதற் பதிகம் பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- சைவசமயக் குரவர்கள் நின்ற நெறிகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- சைவசமயக் குரவர்கள் செய்த தொண்டுகள் அடியார் வழிபாடுகள் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடுங்கள்
- இறைநம்பிக்கையும் பக்தியும் எம்மை நல்வழியில் இட்டுச் செல்லும் என்ற எண்ணக்கருவை மாணவர்களுக்கு ஏற்படும் வகையில் விளக்கம் அளியுங்கள்.

**படி 2:** - மாணவர்களைக் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்
ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
நியதிகளைக் கூறுங்கள்.ட(செயற்பாட்டுப் பத்திரம் இளையான்குடிமாற நாயனார் வரலாறு, சிவனடியார் சிறப்பு, சிவனடியார் வழிபாடு, விருந்தோம்பல் பண்பு என்பவற்றை மாணவர்கள் எவ்வாறு கிரகித்துக் கொண்டார்கள் என்பதனை அறியும் வகையில் அமைதல் வேண்டும்) ஒவ்வொரு குழுவிற்கும் தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

**படி 3:** - மாணவர்கள் குழுக்களாக இயங்கிச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
சகல மாணவர்களுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு வழிகாட்டுங்கள்
- தேவை ஏற்படுமிடத்து மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டுங்கள்.

**படி 4:** - ஒவ்வொரு குழுவும் தனது கருத்தை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்கள் வழங்க இடமளியுங்கள்.
- ஏனைய கருத்துக்கள் தேவைப்படின் விளக்கம் அளித்து மாணவர்களை நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின முயற்சிக்குப் பாராட்டு வழங்குங்கள்.

- சிவனடியார்கள் சிவ சிந்தனையும் சிவவழிபாடும் உடையவர்கள்.
- அவர்கள் சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்கம் அணிந்திருப்பர். சிவனடியாரை வழிபடுதல் சிவனை வழிபடுதற்கு நிகரானது.
- சிவனடியாரை வழிபட்டு முத்தியடைந்த நாயன்மார்களில் இளையான்குடிமாற நாயனாரும் ஒருவர்.
- இளையான்குடிமாற நாயனார் இறை பக்தியும் சிவவழிபாடும் உடையவர்.
- வறுமை வந்த போதும் விருந்தோம்பும் பண்பினையும் சிவனடியார் வழிபாட்டினையும் அன்போடும் பக்தியோடும் மேற்கொண்டார்.
- இவரின் இவ்வரிய செயல்கள் மூலம் இறுதியில் பேரின்ப பெருவாழ்வு பெற்றார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 1.இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம் டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

**படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- இறையருள் பெறுவதற்கு இறை நம்பிக்கையும் இறைபக்தியும் தேவை என்பதனைக் கூறுவர்.
- சிவனடியார்கள் சிவசிந்தனையில் திளைத்தவர்கள் என்பதனை அறிவர்.
- சிவனடியார்கள் சிவசின்னங்கள் தரித்திருப்பர் என்பதனைக் கூறுவர்.
- இளையான்குடிமாற நாயனார் சிவனடியார் வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்.
- வறுமை வந்த போதும் விருந்தோம்பும் பண்பினை பக்தியோடு மேற்கொண்டு இறையருள் பெற்றார்.

**செயற்பாட்டுப் பத்திரம் (1)**

**(பின்னிணைப்பு 01 இல் உள்ள பெரியபுராணப் பாடல் மாதிரிக்கு)**

**குழு 01** இளையான்குடிமாற நாயனார் சிவனடியாரரை எவ்வாறு உபசரித்தார் என கொண்டு வந்த மனை... என்ற பாடலை அடிப்படையாகக் கொண்டு எழுதுக.

**குழு 02** இளையான்குடிமாற நாயனார் சிவனடியார் வழிபாடு செய்தமையினால் அடைந்த பேற்றை அன்பனே அன்பர்.... என்ற பாடலை அடிப்படையாகக் கொண்டு எழுதுக.

**செயற்பாட்டுப் பத்திரம் (11)**

இளையான்குடிமாற நாயனார் சிவனடியாரை உபசரிக்கும் முறையினை இருகுழுக்களாகப் பிரித்து நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.

**பின்னிணைப்பு 01**

பாடல் 1

கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலினன் ஆசனத்திடை வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்திலாறு சுவைத்திறத்தினில் ஒப்பில
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய அளித்தார்.

இளையான்குடிமாற நாயனார் சிவனடியாரை தம் இல்லத்திற்குள் அழைத்துவந்து அழகிய அவர்களின் திருவடியை நீரால் தூய்மை செய்து விளக்கி மிக்க அன்பினால் தக்க இருக்கையில் அமரச் செய்து வழிபட்டு அதன் பின்பு நான்கு விதத்தில் அமைந்த அறுசுவை உணவுகளையும் ஒப்பிலாத சிவபெருமானின் அடியவர் விருப்பத்துடன் உண்ணுமாறு நாள் தோறும் கொடுத்து வந்தார்.

பாடல் 2

அன்பனே அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்
என்பெரும உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன் பெரு நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப
இன்பமார்ந்திருக்க எனறே அருள் செய் தான் எவர்க்கும் மிக்கான்.

அன்பனே அடியார்களது பூசையைச் சற்றும் வழுவாமல் செய்த நீ உன் மனைவியோடும் என் பெரிய உலகத்தை அடைந்த குபேரன் தானே முன்னர் நிதிகளை ஏந்தி உன் மொழி வழியே ஏவல் செய்ய பேரின்பம் அனுபவித்துக் கொண்டிருப்பாயாக என்று எவருக்கும் மிக்கவர்கள் சிவபெருமான் அருள் செய்தார்.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள்

   1……………………………………………………………………………………

   2……………………………………………………………………………………

   3……………………………………………………………………………………

   4……………………………………………………………………………………

   5……………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது)

   இறையருள் பெறுவதற்கு இறை நம்பிக்கையும் இறைபக்தியும் தேவை என்பதனையும் சிவசிந்தனை, சிவசின்னங்கள் தரித்திருப்பவர்கள் சிவனடியார்கள் வறுமை வந்த போதும் விருந்தோம்பும் பண்பினை பக்தியோடு மேற்கொண்டு இறையருள் பெற்றார். அவர்களின் வழி பிள்ளைகளிடம் பழக்க வழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்ச தோத்திரத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு : பஞ்ச தோத்திரங்களை அறிந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம்**

**நேரம் :** 02 பாடவேளை

**கற்றல் பேறு**

- பஞ்ச தோத்திரங்களை இனங் காண்பர்.
- சமய நிகழ்வுகளின் போது பஞ்ச தோத்திரங்களைப் பாடமுன்வருவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**

- மாணவர்கள் கோயில்களில் பாடும் பதிகங்களைக் கேட்டு அறியுங்கள்.
- அவற்றினைப் பண்ணோடு பாட வழிகாட்டுங்கள்
- பஞ்ச தோத்திரம் பாடப்படும் சந்தர்ப்பங்கள் பற்றி கலந்துரையாடுங்கள்.
- அவற்றில் பஞ்ச தோத்திரங்களை இனங்காணும் படிக் கூறுங்கள்.
- பஞ்ச தோத்திரப் பாடல்களை இசை ஞானமுள்ள சமய ஆசிரியரோ அல்லது மாணவரோ பாட ஏனைய மாணவர்களைச் செவிமடுக்கச் செயுங்கள். அல்லது சங்கீத ஆசிரியரின் உதவியைப் பெற்று மாணவர்களை இசையுடன் பாட ஊக்குவிப்பு வழங்குங்கள்.
- பஞ்ச தோத்திர இறுவட்டுக்களையும் பயன்படுத்தலாம்.

**படி 2:**

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் படிவத்தினை வழங்குங்கள்.

**படி 3:**

- மாணவர்கள் குழுக்களாக இயங்கிச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.

  சகல மாணவர்களுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு வழிகாட்டுங்கள்
- தேவை ஏற்படுமிடத்து மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டுங்கள்.

**படி 4:**

- ஒவ்வொரு குழுவும் தனது கருத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்கள் வழங்க இடமளியுங்கள்.
- ஏனைய கருத்துக்கள் தேவைப்படின் விளக்கம் அளித்து மாணவர்களை நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின முயற்சிக்குப் பாராட்டு வழங்குங்கள்.
- பின்வரும் விடயம் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
  - பஞ்ச தோத்திரம் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் ஒழுங்கில் பாடப்பட வேண்டும்.
  - பஞ்ச தோத்திரம் பாட முன்பும் பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் சொல்லல் வேணடும்.
  - வீடுகளிலும் கோயில்களிலும் பிரார்த்தனை வேளையில் பஞ்ச தோத்திரம் ஓதப்படுகின்றது.
  - பஞ்ச தோத்திரத்தினை பிழையற பண்ணோடும் பக்தியோடும் பாட வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 3.1.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம் டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

**படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- பஞ்ச தோத்திரம் பாடும் ஒழுங்கினைக் கூறுவர்.
- பஞ்ச தோத்திரங்களையும் பாடியோரையும் அட்டவணைப்படுத்துவர்.
- பஞ்ச தோத்திரம் பாட முன்பும் பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் சொல்லல் வேண்டும் என்பதனை அறிவர்.
- பஞ்ச புராணம் பாடப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுவர்.
  பண்ணோடும் பக்தியோடும் பஞ்ச தோத்திர ஒழுங்கில் பாடல்களைப் பாடுவர்.

**இணைப்பு 3.1.1** **செயற்பாட்டுப் பத்திரம்**

- பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.பஞ்ச

| தோத்திரம் | பாடியோர் |
|---|---|
| தேவாரம் பாடிய மூவர் | ……………………………………………….. |
| திருவாசகம் | ……………………………………………….. |
| திருவிசைப்பா பாடிய இருவர் | ….…………………………………………….. |
| திருப்பல்லாண்டு | ……………………………………………….. |
| பெரியபுராணம் | ……………………………………………….. |

- பஞ்ச புராணம் பாடும் சந்தர்ப்பம் மூன்று தருக.
- பஞ்ச புராணத்தைப் பாடும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் நான்கு தருக.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

   1.…………………………………………………………………………………………

   2.…………………………………………………………………………………………

   3.…………………………………………………………………………………………

   4.…………………………………………………………………………………………

   5.…………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது)

   பஞ்ச தோத்திரம் பாட முன்பும் பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் சொல்லல் வேண்டும். வீடுகளிலும் கோயில்களிலும் பிரார்த்தனை வேளையில் பஞ்ச தோத்திரத்தினை பிழையற பண்ணோடும் பக்தியோடும் பாட பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.**

**தேர்ச்சி மட்டம்** 3.1 : பஞ்ச தோத்திரத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு : திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரத்தினைப் பண்ணோடு பாடுவோம் எழுத்துப் பிழையின்றி பதிகத்தினை எழுதுவோம்.**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**

- திருஞானசம்பந்தர் தேவாரத்தினை பொருள் உணர்ந்துபண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- தேவாரத்தினை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவர்.
- நாளாந்தச் செயற்பாட்டின்போது பதிகத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

படி 1:
- மாணவர்களிடம் திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களைக் கேட்டு அறியுங்கள்.
- அத்தேவாரத்தினைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- இடரினும் தளரினும்.... என்ற பதிகத்தினைப் திருஞானசம்பந்தர் பாடியருளினார்.
- முதல் மூன்று திருமுறைகளும் சம்பந்தரால் பாடப்பட்டது.
- வீட்டு வழிபாடு, கோயிற் பூசை வெள்ளிக்கிழமைப் பிரார்த்தனைகளின் போது திருவாசகம் பாடப்படும்.

படி 2:
- மாணவர்களைக் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்
  ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
  நியதிகளைக் கூறுங்கள்.பாடல்கள், நாயன்மார்கள் சந்தர்ப்பங்கள் என்பவற்றை மாணவர்கள் எவ்வாறுகிரகித்துக் கொண்டார்கள் என்பதனை அறியும் வகையில் அமைதல் வேண்டும்)
  ஒவ்வொரு குழுவிற்கும் தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.

படி 3:
- மாணவர்கள் குழுக்களாக இயங்கிச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
  சகல மாணவர்களுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு வழிகாட்டுங்கள்
- தேவை ஏற்படுமிடத்து மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டுங்கள்.

படி 4:
- ஒவ்வொரு குழுவும் தனது கருத்தை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்கள் வழங்க இடமளியுங்கள்.
- ஏனைய கருத்துக்கள் தேவைப்படின் விளக்கம் அளித்து மாணவர்களை நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின முயற்சிக்குப் பாராட்டு வழங்குங்கள்.
- பின்வரும் விடயம் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.

- இடரினும் தளரினும் என்ற பதிகம் திருஞான சம்பந்தரினால் பாடப்பட்டது.
  திருவாவடுதுறையிலுள்ள இறைவன்மீது பாடப்பட்டது.
- இறைவன் நஞ்சுண்ட புராணக் கதை கூறுவது.
- இறைவனின் கருணைத் திறன் கூறப்பட்டுள்ளது.
- தேவாரம் பாடமுன்பும் பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறுதல்
- தேவாரத்தினை மனனம் செய்து பண்ணுடனும் பக்தியுடனும் பாடுதல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 3.1.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்
டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- இடரினும் தளரினும்... என்ற பதிகம் திருஞான சம்பந்தரினால் பாடப்பட்டது என்று கூறுவர்.
- திருவாவடுதுறையிலுள்ள இறைவன்மீது பாடப்பட்டது என அறிவர்.
- இறைவன் நஞ்சுணட் புராணக் கதையை விளக்குவர்.
- பதிகத்தினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**இணைப்பு 3.1.1 செயற்பாட்டுப் பத்திரம் (தனியாள் செயற்பாடு)**

- இடரினும் தளரினும்... என்னும் பதிகம் யாரால் பாடப்பட்டது?
- இப்பதிகம் பாடப்பட்ட தலம் யாது?
- இப்பதிகத்தில் கூறப்பட்ட புராணக்கதை யாது?
- இடரினும் தளரினும்... என்னும் தேவாரத்தினை வரிக்கிரமமாக எழுதுக.
- இடரினும் தளரினும்... என்னும் தேவாரத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாடுக.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

   1………………………………………………………………………………………

   2………………………………………………………………………………………

   3………………………………………………………………………………………

   4………………………………………………………………………………………

   5………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது)

   வீடுகளிலும் கோயில்களிலும் பிரார்த்தனை வேளையில் பஞ்ச தோத்திரத்தினை பிழையற பண்ணோடும் பக்தியோடும் பாட பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள்.குறிப்பாக இடரினும் தளரினும்... என்னும் தேவாரத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.**

**தேர்ச்சி மட்டம்** 3.1 : பஞ்ச தோத்திரத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு : திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரத்தினை பண்ணோடு பாடுவோம் எழுத்துப் பிழையின்றி பதிகத்தினை எழுதுவோம்.**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**
- திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரத்தினைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- தேவாரத்தினை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவர்.
- நாளாந்த செயற்பாட்டின் போது பதிகத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி1 :**
- மாணவர்களிடம் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய பதிகங்களைக் கேட்டு அறியுங்கள்.
- அத்தேவாரத்தினைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- ஓசை ஒலியெலாம்... என்ற பதிகத்தினைப் பண்ணோடு பாடக்கூடிய சமய ஆசிரியரோ அல்லது மாணவரோ பாட ஏனைய மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள். அல்லது சங்கீத ஆசிரியரின் உதவியைப் பெற்று மாணவர்களை இசையுடன் பாட வழிகாட்டுங்கள்.
- தேவையெனின் இறுவட்டுக்களையும் பயன்படுத்தலாம்.

**படி 2::**
- மாணவர் ஒவ்வொருவருக்கும் செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறுங்கள்.

**படி 3: -** மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
பாடலைப் பண்ணோடு பாட முன்னாயத்தம் செய்வதனை நெறிப்படுத்துங்கள்.

**படி 4 :-** ஒவ்வொரு மாணவரும் எழுதிய பதிகத்தினைக் காட்சிப்படுத்துங்கள்
- ஒவ்வொரு மாணவரினதும் செயற்பாட்டிற்கும் ஏனைய மாணவர்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர் தனித்தனியே தேவாரத்தினை மனனம் செய்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயம் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
  - ஓசை ஒலியெலாம்... என்ற பதிகம் திருநாவுக்கரசு சுவாமிகளினால் பாடப்பட்டது.
  - திருவையாற்றுத் திருத்தலத்து இறைவன்மீது இப்பதிகம் பாடப்பட்டது.
  - இறைவன் எங்கும் நிறைந்தவன் என்ற வகையில் அவனது வியாபகத் தன்மை கூறப்படுகின்றது.
  - தேவாரம் பாடமுன்பும் பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறப்படவேண்டும்.
  - தேவாரத்தினை மனனம் செய்து பண்ணுடனும் பக்தியுடனும் பாடவேண்டும்.

தரவிருத்தி உள்ளீடுகள் : இணைப்பு 3.1.1 இல் உள்ள செயற்பாட்டுப் படிவம்.
டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, இசைப்பேழை

**படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- ஓசை ஒலியெலாம்... என்ற பதிகம் திருநாவுக்கரசு சுவாமிகளினால் பாடப்பட்டது என்று கூறுவர்.
- இப்பதிகம் திருவையாற்றுத் திருத்தல இறைவன்மீது பாடப்பட்டது என அறிவர்.
- இறைவனின் வியாபகத்தன்மையை விளக்குகின்றது என்பதை விளக்குவர்.
- பதிகத்தைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**இணைப்பு 3.1.1 செயற்பாட்டுப் பத்திரம்**

- ஓசை ஒலியெலாம்... என்னும் பதிகம் யாரால் பாடப்பட்டது?
- இப்பதிகம் எத்திருத்தல இறைவனை நோக்கிப் பாடப்பட்டது?
- ஓசை ஒலியெலாம்... என்னும் தேவாரத்தினை வரிக்கிரமமாக எழுதுக.
- ஓசை ஒலியெலாம்... என்னும் தோவாரத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாடுக.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள்

   1.……………………………………………………………………………………………

   2.……………………………………………………………………………………………

   3.……………………………………………………………………………………………

   4.……………………………………………………………………………………………

   5.……………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) வீடுகளிலும் கோயில்களிலும் பிரார்த்தனை வேளையில் பஞ்ச தோத்திரத்தினை பிழையற பண்ணோடும் பக்தியோடும் பாட பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள்.குறிப்பாக ஓசை ஒலியெலாம்... என்னும் தேவாரத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : திருமுறைப்பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.**

**தேர்ச்சி மட்டம்** 3.1 : பஞ்ச தோத்திரத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு : சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரத்தினை பண்ணோடு பாடுவோம் எழுத்துப் பிழையின்றி பதிகத்தினை எழுதுவோம்.**

**நேரம்** : 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு** :

- சந்தரமூர்த்தி நாயனரின் தேவாரத்தினைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்
- தேவாரத்தினை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவர்.
- நாளாந்த செயற்பாட்டின் போது பதிகத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1 :**
- மாணவர்களிடம் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய பதிகங்களைக் கேட்டு அறியுங்கள்.
- இறையருள் பெற்ற நாயன்மார்கள் நாயன்மார் வரிசையில் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்ட பல்வேறு தேவாரங்கள் காணப்டுகின்றன.
- சுந்தரரின் தேவாரப் பாடல்களில் இறைவனின் பெருமை, தத்துவச் சிறப்பு என்பன காணப்படுகின்றன.

**படி 2 :** மாணவர் ஒவ்வொருவருக்கும் செயற்பாட்டுப் பத்திரத்தினை வழங்குங்கள்
தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
நியதிகளைக் கூறுங்கள்.

**படி 3: -** மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- பாடலைப் பண்ணோடு பாட முன்னாயத்தம் செய்வதனை நெறிப்படுத்துங்கள்.

**படி 4 :** ஒவ்வொரு மாணவரும் எழுதிய பதிகத்தினைக் காட்சிப்படுத்துங்கள்
- ஒவ்வொரு மாணவரினதும் செயற்பாட்டிற்கும் ஏனைய மாணவர்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர் தனித்தனியே தேவாரத்தினை மனனம் செய்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயம் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
- ''பித்தாப்பிறை சூடி…'' என்ற பதிகம் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்டது.
- சுந்தரர் திருமணக் கோலத்தில் இருக்கும் போது இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டார். கோபமடைந்த சுந்தரர் பித்தா என இறைவனைப் பேசினார். உண்மையறிந்து அதனை உணர்ந்து இப்பாடலைப் பாடினார்.
- இறைவன் எங்கும் நிறைந்தவன் என்ற வகையில் அவனது வியாபகத் தன்மை கூறப்படுகின்றது.
- தேவாரம் பாடமுன்பும் பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறப்படவேண்டும்.
- தேவாரத்தினை மனனம் செய்து பண்ணுடனும் பக்தியுடனும் பாடவேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 3.1.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்
டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

**படி 5 : கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- பித்தாப்பிறை சூடி..... என்ற பதிகம் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்டது என்று அறிந்து கூறுவர்.
- இப்பதிகம் சுந்தரர் இறைவானால் தடுத்தாட் கொள்ளப்பட்ட போது பாடப்பட்டது என விளக்கிக் கூறுவர்.
- திருவெண்ணெய் நல்லூர் திருத்தலத்து இறைவன் மீது பாடப்பட்டது என்பதை கூறுவர்.
- பதிகத்தைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**இணைப்பு 3.1.1 செயற்பாட்டுப் பத்திரம்**

- பித்தாப்பிறை... என்னும் பதிகம் யாரால் பாடப்பட்டது?
- இப்பதிகம் எத்திருத்தல இறைவனை நோக்கிப் பாடப்பட்டது?
- பித்தாப்பிறை சூடி... என்னும் தேவாரத்தினை வரிக்கிரமமாக எழுதுக.
- பித்தாப்பிறை சூடி... என்னும் தோவாரத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாடுக.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1............................................................................................................

   2............................................................................................................

   3............................................................................................................

   4............................................................................................................

   5............................................................................................................

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) வீடுகளிலும் கோயில்களிலும் பிரார்த்தனை வேளையில் பஞ்ச தோத்திரத்தினை பிழையற பண்ணோடும் பக்தியோடும் பாட பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள்.குறிப்பாக பித்தாப் பிறை சூடி... என்னும் தேவாரத்தினை பண்ணோடும் பக்தியோடும் பாட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்ச புராணத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு :** **திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பவற்றைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம். பதிகங்களை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவோம்.**

**நேரம் :** 03 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**
- திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பவற்றைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- பதிகங்களை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1 :** பஞ்ச புராணத்தில் தேவாரத்தின் பின் பாடப்படும் திருமுறைப் பாடல்களை மாணவர்களிடம் இருந்து கேட்டறியுங்கள்.
- ▪ மாணவர்கள் அறிந்த திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய திருமுறைப் பாடல்களின் முதல் அடிகளை கூறும்படி கேளுங்கள்.
- ▪ திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு பாடக்கூடிய சமயபாட ஆசிரியரோ அல்லது நன்கு பாடக்கூடிய மாணவர்களோ வகுப்பறையில் பாட ஏனைய மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- ▪ ஒலிப்பதிவு நாடாக்களில் திருமுறைப் பாடல்களை ஒலிக்கச் செய்தும் மாணவர்கள் செவிமடுக்கலாம்.
- ▪ தேவை ஏற்படின் சங்கீத பாட ஆசிரியர் உதவியுடன் திருமுறைப் பாடல்களைப் பாடச்செய்து மாணவர்களைச் செவிமடுக்கும்படி செய்யுங்கள்.

**படி 2 :** தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- திருவுளச் சீட்டின் மூலம் மாணவர்களுக்குரிய பாடல்களை தெரிவு செய்ய இடமளியுங்கள்.

**படி 3 -** மாணவர்கள் ஒவ்வொருவரும் தாம் தெரிவு செய்த பாடலை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமாமாக எழுதுதல்.
- பாடியவர் பெயர் பாடல்வகையினை குறிப்பிடல். திருமுறையின் வகையை எழுதுதல்.
- தெரிவு செய்த திருமுறைப்பாடல் பண்ணோடும் பக்தியோடும் பாடுவதற்கு முன்னாயத்தம் செய்தல்.
- முன்னாயத்தம் செய்யும் போது ஆசிரியர் மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்கவும்.

**படி 4 : -** மாணவர் எழுதிய திருமுறைப் பாடலகளை காட்சிப் படுத்துங்கள்.
- பண்ணோடும் பக்தியோடும் பாடுதல்.
- பின்வரும் விடயம் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
- ▪ பஞ்ச புராணத்தில் தேவாரம் ஓதிய பின் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்ற ஒழுங்கில் பாட வேண்டும்.
- ▪ பாடியோர் பெயர், பாடியவர், திருமுறையின் தொகுப்பு பின்வருமாறு அமையும்.

| நூல் | பாடியவர் | அடங்கும் திருமுறை |
|---|---|---|
| திருவாசகம் | மணிவாசகர் | எட்டாம் திருமுறை |
| திருவிசைப்பா | திருமளிகைத் தேவர்முதலான ஒன்பது பேர் | ஒன்பதாம் திருமுறை |
| திருப்பல்லாண்டு | சேந்தனார் | ஒன்பதாம் திருமுறை |
| பெரியபுராணம் | சேக்கிழார் | பன்னிரண்டாம் திருமுறை |

- திருமுறைப் பாடல்களை எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக எழுதுதல்.
- உரிய பண்ணோடு பாடல்களைப் பாடுதல்.
- திருமுறைப் பாடல்களைப் பாடும் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. கைகூப்பி நிற்கும் நிலை
2. பாட முன்பும் பாடிய பினபும் திருச்சிற்றம்பலம் சொல்லுதல்.
3. பண்ணோடும் பக்தியோடும் பாடுதல்.
4. அடிமுறைப் பிழையாது பாடல்களைத் தெளிவாகப் பாடுதல்.

- தேவை ஏற்படின் மீண்டும் ஆசிரியரோ மாணவரோ பாடிக் காட்டி அல்லது ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்க விட்டு மாணவர்களை மீண்டும் செவிமடுக்கச் செய்யலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:** இணைப்பு 2.1.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்
டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

ஒவ்வொரு மாணவர்களுக்கும் அவர்கள் எழுதிய பாடலுக்கும் பண்ணோடும் பக்தியோடும் பாடிய பாடலுக்கும் புள்ளி வழங்குங்கள்

1. திருமுறைப் பாடலை எழுத்துப் பிழையின்றி எழுதுவர்.
2. பாடியவர் பெயர், பாடல் வகை, அடங்கும் திருமுறைகளை இனம் காண்பர்
3. திருமுறைப் பாடல்களை பண்ணோடும் பக்தியோடும் பொருள் உணர்ந்து பாடுவர்.
4. பதிகங்களைப் பாட முன்பும் பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறுவர்.
5. பதிகங்களைப் பாட முன்வருவர்.

**செயற்பாட்டுப் பத்திரம்**

- திருவுளச்சீட்டின் மூலம் தெரிவு செய்த திருமுறைப் பாடலை வரிக்கிரமாமாக எழுதிப் பாடியவர் பெயர், அடங்கும் திருமுறை , பாடல்வகை என்பவற்றையும் குறிப்பிடுக.

- தெரிவு செய்த திருமுறைப் பாடலை பண்ணோடும் பக்தியோடும் பாடிக் காட்டுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1……………………………………………………………………………………………
   2……………………………………………………………………………………………
   3……………………………………………………………………………………………
   4……………………………………………………………………………………………
   5……………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) வீடுகளிலும் கோயில்களிலும் பிரார்த்தனை வேளையில் பஞ்ச தோத்திரத்தினை பிழையற பண்ணோடும் பக்தியோடும் பாட பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 :** **திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்ச புராணத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு :** **தோத்திரப் பாடல்களில் திருப்புகழ் பற்றி அறிந்து பாடுவோம்.**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :-** பஞ்ச புராணம் ஓதிய பின் தோத்திரப்பாடல்களை பாடவேண்டும் என்பதனை அறிவர்.
திருப்புகழை பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- திருப்புகழ் பற்றி மாணவர்களிடம் கேட்டு கலந்துரையாடுங்கள்.
- மாணவருக்குத் தெரிந்த திருப்புகழ் ஒன்றினைப் பாடிக் காட்டும்படி கேளுங்கள்.
- திருப்புகழை சமயபாட ஆசிரியர் அல்லது நன்கு பாடக்கூடிய மாணவர்களை வகுப்பறையில் பாட ஏனைய மாணவர்கள் செவிமடுக்கச் செய்யுங்கள். (ஒலிப்பதிவு நாடாவையும் பயன்படுத்தலாம்)
- தேவை ஏற்படின் சங்கீத ஆசிரியரின் உதவியுடன் திருப்புகழைப் பாடச் செய்து மாணவர்களை செவிமடுக்கும் படிக கூறுங்கள்.

**படி 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்
- தர உள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.

**படி 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்கிச் செயற்படுவதனை மேற்ப்பார்வை செய்யுங்கள்.
- மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டுங்கள்.

**படி 4:**
- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையை முன்வைத்து விளக்கம் அளிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
ஏனைய குழுக்கள் கருத்துக்கள் வழங்க இடமளியுங்கள்.
பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கருத்துக்களை முன்வையுங்கள்.
- திருப்புகழ் அருணகிரிநாதரால் பாடப்பட்டது.
- முருகன் புகழைப் பாடும் பக்தி நூலாகத் திருப்புகழ் விளங்குகின்றது.
- சந்தச் சிறப்பும் தாளச் சிறப்பும் கொண்டனவாகத் திருப்புகழ் விளங்குகின்றது.
- பஞ்ச புராணம் ஓதியபின் திருப்புகழ் பாடும் மரபு உண்டு.
- திருப்புகழை சந்தக் கவி உணர்வுடன் பண்ணோடும் பக்தியோடும் பாடுதல் வேண்டும்.

தரவிருத்தி உள்ளீடுகள் : இணைப்பு 1.2.2 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம் டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- தோத்திரப் பாடல் வகையில் திருப்புகழ் அடங்கும் என்பதனை அறிவர்.
- திருப்புகழை அருணகிரிநாதர் பாடினார் என்பதனை கூறுவர்.
- சந்தச் சிறப்பும் தாளச் சிறப்பும் உடையன திருப்புகழ் என்பதை அறிவர்
- சந்தச் சிறப்புடன் திருப்புகழைப் பாடுவர்.
- தமது வாழ்வில் பண்ணோடும் பக்தியோடும் திருப்புகழைப் பாடுவர்.

**செயற்பாட்டுப் பத்திரம்**

குழு 01
1. திருப்புகழைப் பாடியவர் யார்?
2. திருப்புகழில் போற்றப்படும் கடவுள் யார்?
3. இசைந்தவேறும் என்ற திருப்புகழை வரிக்கிரமமாக எழுதுக.

குழு 02
1. இசைந்த வேறும் என்ற திருப்புகழில் பாடப்பட்ட முருகனின் பெருமைகள் இரண்டு தருக.
2. சிவனின் போர்வை எதுவென அருணகிரிநாதர் கூறுகின்றார்?
3. இசைந்தவேறும் என்ற திருப்புகழை வரிக்கிரமமாக எழுதுக.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

   1.……………………………………………………………………………………………

   2.……………………………………………………………………………………………

   3.……………………………………………………………………………………………

   4.……………………………………………………………………………………………

   5.……………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது)

   வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) வீடுகளிலும் கோயில்களிலும் பிரார்த்தனை வேளையில் திருப்புகழை பிழையற பக்தியோடு பாட பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள்.குறிப்பாக இசைந்தவேறும்… என்னும் திருப்புகழை பக்தியோடு பாட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவர்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 :** ஆலய வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் பேணும் முறையை எடுத்துரைப்பர்.

**செயற்பாடு : ஆலய வழிபாட்டு முறைகளை அறிந்து வழிபாட்டினை மேற்கொள்வோம்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள் :**

- 1. ஆலயம் என்பதன் பொருளைக் கூறுவர்.
  2. வழிபாட்டு முறைகளை முறைப்படி தமது வாழ்வில் மேற்கொள்வர்

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- ஆலயம் தொடர்பான விடயங்களைக் கூற இடமளியுங்கள்
- பின்வரும் விடயங்களின் அடிப்படையில் கலந்துரையாடுங்கள்.
- ஆலயம் என்பதன் பொருள் ஆன்மா லயப்படும் இடமாகும்.
- ஆலயத்திற்குச் செல்லும் போது வெறுங்கையுடன் செல்லாது பழம், பாக்கு, வெற்றிலை போன்ற பூசைபொருட்களை அரைக்கு மேல் தாங்கிச் செல்லல் வேண்டும்.

**படி 2**
- மாணவர்களின் தொகைக்கு ஏற்ப குழுக்களாக்குங்கள்
- ஒவ்வொரு குழுக்களுக்குமுரிய செயற்பாட்டுப் படிவம்,தரஉள்ளீட்டுப் பொருட்களைப் பகிர்ந்தளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டிற்கும் உதவுங்கள்.

**படி 3**
- குழுக்கள் அறிக்கைகளை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதே குழுவினர் கருத்துக்களை கூற இடம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களை கூற இடமளியுங்கள்.

**படி 4**
- பின்வரும் கருத்துக்களை மையமாகக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து இறை சிந்தனையுடன் ஆலயத்திற்குச் செல்லல் வேண்டும்.
- ஆலயத்திற்குச் சென்றதும் கோபுரத்தினை வணங்கிப் பின் துவார பாலகரது அனுமதியினைப் பெற்று உள்ளே சென்று முதலில் பிள்ளையாரை மும்முறை குட்டி தோப்புக்கரணம் போட்டு வழிபடல் வேண்டும். பின் மூலமூர்த்தியையும் பரிவாரத் தெய்வங்களையும் வணங்குதல் வேண்டும்.
- இறுதியில் சண்டேஸ்வரரை மூன்றுமுறை கை தட்டி வணங்குதல் வேண்டும்.
- ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்கரமும் இருபாலரும் திரியங்க நமஸ்காரமும் செய்தல் அவசியமாகும்.
- ஆலய வழிபாட்டினை முறைப்படி பேணி வருதல் இந்துக்களின் முக்கிய கடமையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- செயற்பாட்டுப் படிவம். (ஆகமம் சார்ந்த வழிபாடு)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்,
- திருக் கோயில் படங்கள்
- வழிபடும் முறை பற்றிய படங்கள்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- ஆலயம் என்பதன் பொருளை எழுதுவர்.
- ஆலய வழிபாட்டின் போது கொண்டு செல்லும் பொருட்கள் ஐந்தினை எழுதுவர்.
- அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்களை வகுப்பறையில் செய்து காட்டுவர்.

**செயற்பாட்டுப் பத்திரம்**

குழு 01
- ஆலயம் என்பதன் பொருளை எழுதுங்கள்.
- ஆலயத்திற்குச் செல்லும் முறையை ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.

குழு 02
- ஆலய வழிபாட்டின் போது நீங்கள் கொண்டு சென்ற பூசைப் பொருட்கள் ஐந்தினை எழுதுங்கள்.
- ஆலயத்தில் மேற்கொள்ளும் நமஸ்காரங்களை எழுதுங்கள்.

குழு 03
- ஆலயங்களில் ஆண்கள் மேற்கொள்ளும் நமஸ்காரம் எது?
- பெண்கள் மேற்கொள்ளும் நமஸ்காரம் எது?

குழு 04
- அட்டாங்க நமஸ்காரம் என்றால் என்ன?
- பஞ்சாங்க நமஸ்காரம் என்றால் என்ன?
- இருபாலாரும் செய்யக் கூடிய நமஸ்காரம் யாது?

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1.……………………………………………………………………………………………

   2.……………………………………………………………………………………………

   3.……………………………………………………………………………………………

   4.……………………………………………………………………………………………

   5.……………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) ஆலயத்திற்குச் செல்லும் முறையை பிள்ளைகளுக்கு பழக்கப்படுத்துங்கள், ஆலய வழிபாட்டிற்கு கொண்டு செல்லும் பூசைப் தயார்படுத்தும் முறைகள், ஆலயத்தில் மேற்கொள்ளும் நமஸ்காரங்களை உரிய முறையில் செய்து காட்டி அவற்றைப் பின்பற்ற வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : சைவசமய குரவர்கள் சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவர்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 :** சமயகுரவர் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் முறையை அறிந்து கூறுவர்.

**செயற்பாடு : சைவசமய குரவர் நால்வரின் வரலாறுகளையும் அறிந்து அவர் வழி ஒழுகுவோம்.**

**நேரம் :** 04 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**

1. நாயன்மாரின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வர்
2. அவர்களின் அற்புதங்களை எடுத்துக்கூறுவர்.
3. அவர்கள் வழி இறைவழிபாட்டில் ஈடுபடுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1: -** நாயன்மார்களைப் பற்றி மாணவர்கள் அறிந்த விடயங்களை எடுத்துக்கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுாமிகள் ஆகியோர் சைவசமய முதற்குரவர்கள் ஆவர்.
  - தேவார முதலிகள் மூவர்.
  - இறைவன் மீது உண்மை பக்தியுடன் ஒழுகியவர்கள்.
  - இறையருளினால் வாழ்வின் இடர்களைக் கடந்தவர்கள்.
  - மக்கள் மத்தியில் பக்தி உணர்வையும் ஆலய வழிபாட்டையும் முதன்மையாகக் கொண்டு சைவசமயத்தை வளர்த்தவர்கள்.

**படி 2: -** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள் (உங்கள் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கை, வகுப்புச் சூழல், இடவசதிக்கேற்ப இக்குழுக்களின் எண்ணிக்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி மாற்றம் செய்யும் போது, இணைப்பு 5.1.1 இல் உள்ள செயற்பாட்டு படிவத்திலும் பொருத்தமான முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும்)

- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3: -** குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குகள்.

- செயற்பாட்டு பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் சிறுநாடகம் ஒன்றினை ஆக்கி நடித்துக் காட்ட இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் நடித்த நாடகம் பற்றிய விமர்சனத்தைப் பொருத்தமான முறையில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள

படி 4 : - விடயம் பற்றிய தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

- சைவசமய மரபில் நாயன்மார்கள் பெறும் முக்கித்துவம்
- இறைவனின் அருளை முழுமையாய் பெற்றவர்கள்
- சைவசமயத்திற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள்
- திருக்கோயில் வழிபாட்டை வளர்த்தவர்கள்
- அற்புதங்கள் மூலம் சமய நம்பிக்கையையும் இறையருளையும் அடியார்களுக்கு உணர்த்தியமை

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 5.1.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.

- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்
- நாடகப்பிரதி
- நாயன்மார் வரலாறு

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- நாயன்மார்களின் வரலாறுகளை அறிந்து கூறுவார்.
- இறைவனின் அருளால் அவர்கள் செய்த அற்புதங்களைப் போற்றுவார்.
- நான்மாரின் தளராத கடவுள் நம்பிக்கையை எடுத்துக் காட்டும் சம்பவங்களைக் கூறுவார்.
- நாயன்மார் காட்டிய வழியில் தமது சமய வாழ்வையும் செம்மைப்படுத்துவர்.

**இணைப்பு 5.1.1 மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

(அ) ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடிச் சேகரித்து எழுதி நாடகமாக முன்வையுங்கள்.

குழு 1

- திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து “தோடுடைய செவியன்…” என்னும் தேவாரம் பாடும்வரையான சம்பவங்களை உமது குழுவினருடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.

குழு 2

- திருநாவுக்கரச நாயனார் வாழ்க்கை வரலாற்றில் அவர் மீண்டும் சைவசமயத்தைத் தழுவுதல் வரையான சம்பவங்களை உமது குழுவினருடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.

குழு 3

- சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானால் திருமணத்தின் போது ஆட்கொள்ளப்படும் நிகழ்ச்சிகளை உமது குழுவினருடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.

குழு 4

- மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்க்கை வரலாற்றில் அவருக்காக சிவபொருமான் நரிகளை பரிகளாக்கிய சம்பவம் வரையிலான நிகழ்ச்சிகளை உமது குழுவினருடன் இணைந்து நாடகமாக நடித்துக் காட்டுக.

(ஆ) செயற்பாட்டுப் பத்திரம் - 2

பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

சமயக்குரவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரச நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் மாணிக்கவாசக சுவாமிகள் நால்வர்

| | | | | |
|---|---|---|---|---|
| மறுபெயர்கள் | | | | |
| | 1. | 1. | 1. | 1. |
| | 2. | 2. | 2. | 2. |
| | 3. | 3. | 3. | 3. |
| பக்தி உறவுமுறை | | | | |
| நின்ற நெறி | | | | |
| அடைந்த முத்தி | | | | |
| முக்தி அடைந்த தினம் | | | | |

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1……………………………………………………………………………………………

   2……………………………………………………………………………………………

   3……………………………………………………………………………………………

   4……………………………………………………………………………………………

   5……………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) நாயன்மார் காட்டிய வழியில் தமது சமய வாழ்வையும் செம்மைப்படுத்த பிள்ளைகளை சரியைத் தொண்டுகளில் வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : சைவசமய குரவர்கள் சமயப் பெரயார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவர்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 :** ஈழத்தில் சமயம் வளர்த்த பொரியார்களையும் அவர்களது பணிகளையும் அறிந்து அவர்களுக்கு மதிப்பளிக்கும் முறையை விளக்குவர்.

**செயற்பாடு : சுவாமி ஞானபிரகாசரின் சமய பணிகளை அறிந்து அவருக்கு மதிப்பளிப்போம்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றல் பேறு :**

1. சுவாமி ஞானப்பிரகாசர் ஈழத்தில் சைவசமயத்தை நிலைநிறுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தார் என்பதை அறிந்துகொள்வர்.
2. அவருடைய ஜீவகாருண்ய பண்பை விளக்குவர்.
3. தமிழகத்திலும் சமய பணியைத் தொடர்ந்தார் என்பதையும் சைவத்துக்கு சேவைகள் செய்தார் என்பதையும் எடுத்துக் கூறுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:** - இலங்கையில் சைவம் வளர்த்த பெரியார்களைப் பற்றி மாணவர்கள் அறிந்த விடயங்களை எடுத்துக்கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அந்நியர் ஆட்சியில் சைவசமயத்தின் நிலை எவ்வாறு இருந்திருக்கலாம் என்பதையும் மாணவர்கள் எடுத்துக்கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்கள் மீது அதிக கவனம் செலுத்துங்கள்.
  - சுவாமி ஞானப்பிரகாசர் இலங்கையில் வாழ்ந்த சைவசமய பெரியாராவார்.
  - அவர் பறங்கியர் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தவராவார்.

**படி 2:** - மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி 3:** - குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் சிறுநாடகம் ஒன்றினை ஆக்கி நடித்துக் காட்ட இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் நடித்த நாடகம் பற்றிய விமர்சனத்தைப் பொருத்தமான முறையில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி 4:** - குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில், நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன் போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- சுவாமி ஞானப்பிரகாசர் பசுவதைக்கு அஞ்சி தமிழகம் சென்றவர்.
- சுவாமி ஞானப்பிரகாசர் வாழ்ந்த கால அரசியல் சூழ்நிலை
- ஈழத்தில் சைவத்தை நிலைநிறுத்துவதில் அவரது பங்களிப்பு
- சிதம்பரத்தில் இவர் மேற்கொண்ட பணிகள்.
- அங்கு மேற்கொண்ட எழுத்து முயற்சிகள்.
  - ○ உரைநூல்கள், சித்தாந்த நூல்கள்

தரவிருத்தி உள்ளீடுகள் :- இணைப்பு 5.2.1 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, படங்கள்
- சுவாமி ஞானப்பிரகாசர் வரலாறு
- நாயன்மார் வரலாறு பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சுவாமி ஞானப்பிரகாசரின் முக்கியத்தவத்தை அறிந்துகூறுவர்.
- அவரிடம் காணப்பட்ட நற்பண்புகளை இனங்கண்டு மதிப்பளிப்பர்.
- சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்க்கை வரலாற்றைக் கதையாகக் கூறுவர்.
- ஈழத்தின் சைவ வளர்ச்சிக்காய் உழைத்தோரின் விபரங்களைச் சேகரிப்பர்.

**இணைப்பு 5.2.1 மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

ஓவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களை, கலந்துரையாடிச் சேகரித்து முன்வையுங்கள்.

குழு 1, 3
- சுவாமி ஞானப்பிரகாசரின் ஜீவகாருண்யத்தை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டும் சம்பவத்தை விளக்கி எழுதுக.
- சுவாமி ஞானப்பிரகாசரின் சமயப் பணிகளை பட்டியல்படுத்துக.

குழு 2, 4
- சுவாமி ஞானப்பிரகாசரின் சமயப் பணிகளை பட்டியல்படுத்துக.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1……………………………………………………………………………………………
   
   2……………………………………………………………………………………………
   
   3……………………………………………………………………………………………
   
   4……………………………………………………………………………………………
   
   5……………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) வீடுகளிலும் சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு அவரின் ஜீவ காருண்யத்தை வாழ்ககையில் கடைப்பிடிக்க பிள்ளைகளை வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0** : **சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 6.1** : சைவ சித்தாந்தம் தொடர்பாக அடிப்படை விளக்கம் பெற்று தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை இனங்காண்பர். அவை தொடர்பாக விளக்கம் பெறுவர்.

**செயற்பாடு** : **முப்பொருள்கள் பற்றி அறிவோம்.**

**நேரம்** : 03 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- 1. முப்பொருட்களைக் கூறுவர்.
  2. ஆன்மாக்களுக்கு வழங்கப்படும் மறுபெயர்கள் மூன்றினை எழுதிக்காட்டுவர்.
  3. மும்மலங்களை எழுதுவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்** :

**படி 1:**
- கண்ணால் காணும் உலகம், உடல் என்பனவற்றினைக் காட்டி இறைவன் பற்றியும் உயிர்பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- எமது ஐந்து விரல்களைக் காட்டி பதி, பசு, பாசம் பற்றி விளக்குங்கள்.
- பின்வரும் விடயங்களின் அடிப்படையில் கலந்துரையாடுங்கள்.
- சைவ சித்தாந்தம் கூறும் உண்மைப் பொருட்கள் மூன்று ஆகும். அவை பதி, பசு, பாசம் என்பனவாகும்.
- பதி என்பதன் விளக்கம், வேறு பெயர்கள் கூறுதல், கடவுள், ஆண்டவன், தலைவன்.
- பசு என்பது பாசத்தால் கட்டுண்டது. மறுபெயர்கள். சதசத்து, உயிர், ஜீவன்
- பாசம் பசுவானது இறைவனை அடைய முடியாது பந்திப்பதாகும் (தடுப்பது). இதில் ஆணவம், கன்மம், மாயை உள்ளடக்கப்படுகின்றது.

**படி 2:**
- மாணவர்களின் தொகைக்கு ஏற்ப குழுக்களாக்குங்கள்
- ஒவ்வொரு குழுக்களுக்குமுரிய செயற்பாட்டுப் படிவம், ஏனைய பொருட்களை பகிர்ந்தளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டிற்கும் உதவுங்கள்.

**படி 3:**
- குழுக்கள் அறிக்கைகளை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதே குழுவினர் கருத்துக்களை கூற இடம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களை கூற இடமளியுங்கள்.

**படி 4:**
- பின்வரும் கருத்துக்களை மையமாகக்கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருட்களில் பதி முதன்மையானவர். எங்கும் நிறைந்தவர், எல்லாம்அறிபவர், யாவற்றினையும் அறியும் ஆற்றல் மிக்கவர்.
- பசு என்பது அநாதி தொட்டு பாசங்களால் கட்டுண்டது.
- அறிவித்தால் மட்டும் அறியக் கூடியது.
- அநாதி தொட்டு மலங்களால் பந்திக்கப்பட்டது.
- முப்பொருட்களில் அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் பாசமாகும்.
- ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும் அடங்கும்.
- பதியினை அடையமுடியாது ஆன்மாவைப் பந்திப்பதால் பாசம் எனஅழைக்கப்படுகின்றது.
- பாசத்திலிருந்து ஆன்மா விடுபடுகின்ற போதே பதியை அடைகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்,
  - சைவ சித்தாந்த நூல் (முப்பொருள் விளக்கம்)
  - வழிபடும் முறை பற்றிய படங்கள்

படி 5: **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருட்கள் எவை என்பதை எழுதுவர்.
- பசு என்பதன் பொருளைக் கூறுவர்.
- மும்மலங்களில் ஆணவத்திற்கு வழங்கப்படும் மறுபெயர்கள் இரண்டு கூறுவர்.

**செயற்பாட்டுப் பத்திரம்**

குழு 01
- சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருட்களையும் எழுதுக.
- பதியின் மறுபெயர்கள் மூன்று தருக.
- பதியின் மூவகைத் திருமேனிகளும் எவையென எழுதுக.

குழு 02
- பசுவின் மறுபெயர்கள் மூன்று தருக.
- பசுவின் இயல்புகள் இரண்டு தருக.
- மூவகை ஆன்மாக்களை எழுதுக.

குழு 03
- பாசம் என்பதனுள் அடங்கும் மலங்களை எழுதுங்கள்.
- அறிவித்தாலும் அறியமாட்டாத பொருளினைக் குறிப்பிடுக.
- ஆணவத்தின் மறுபெயர்கள் இரண்டு தருக.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1……………………………………………………………………………………………

   2……………………………………………………………………………………………

   3……………………………………………………………………………………………

   4……………………………………………………………………………………………

   5……………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) ஆன்மாக்கள் பாசத்திலிருந்து விடுபட இறைவழிபாடு அவசியமானதாகும் இறை வழிபாட்டின் அவசியத்தை பிள்ளைகளுக்கு ஊட்டுங்கள் உயிர் பாசத்திலிருந்து விடுபட்டு இறைவனை அடையும் வழிகளுக்கு அன்றாடம் செய்ய வேண்டிய பழக்கங்களை கூறி வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 : நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 :** நாட்டார் வழிபாட்டு முறைகளையறிந்து தமது வாழ்வில் கடைப்பிடிக்கும் முறைகளை எடுத்துரைப்பர்.

செயற்பாடு : **ஆகமம் சாரா வழிபாட்டின் சிறப்பம்சங்களை அறிவோம்.**

**நேரம்** : 03 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்:**

- 1. கிராமியத் தெய்வங்களையும் ஏற்று வழிபாடு செய்வர்.
  2. கிராமிய வழிபாட்டு நம்பிக்கைகளை தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- மாணவர்கள் தாம் வழிபாடு செய்யும் தெய்வங்கள் பற்றிக் கேட்டுக் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- ஆகமம் சார்ந்த, ஆகமம் சாரா வழிபாடுகள் என இரு வழிபாடுகள் உள்ளன.
- ஆகமம் சாரா வழிபாடு மக்கள் நேரடியாக பக்தியுடன் பூசை செய்து வழிபடும் முறையாகும்.
- ஆகமம் சாரா வழிபாட்டில் இடம் பெறும் ஆண், பெண் தெய்வங்கள்.
- ஆகமம் சாரா வழிபாட்டினை மேற்கொள்வதற்கான காரணம் நம்பிக்கையாகும்.

**படி 2:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களை சிறுசிறு குழுக்களாக்குதல்.
- ஓவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- டிமைன்ற் பேப்பர், பேனா என்பவற்றை ஓவ்வொரு குழுவிற்கும் பகிர்ந்தளித்தல்
- ஓவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து, தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்தல்.

**படி 3:**
- ஓவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவிற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களின் குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப் படுத்துங்கள்.

படி 4:

- மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள் அவர்கள் முன்வைத்த கருததுக்களுக்கு மேலதிகமாகக் கருத்துக்களையும் கூறுங்கள்.
- ஆகம முறைக்குப் புறம்பாக மக்கள் நேரடியாக பக்தியுடன் தாமே பூசை செய்து வழிபடும் வழிபாடு ஆகமம் சாரா வழிபாடாகும்.
- இங்கு பூசை செய்பவர் பூசாரி என அழைக்கப்படுவர்.
- நாட்டார் தெய்வங்கள் ஆண், பெண் தெய்வங்கள் என பாகுபடுத்தப்படுவர்.
- இங்கு நடைபெறும் பூசை சடங்கு எனப்படும்.
- இங்கு நடைபெறும் சடங்குகளில் விழா ஆயத்தம், மடைபரவுதல், வளந்து எடுத்தல், கும்பம் வைத்தல், தூளிபிடித்தல், பரிக்கலம் அடைத்தல், வளந்து வைத்தல், கட்டுச் சொல்லுதல், வழிவிடுதல், மடைபிரித்தல் என்பவை பெரும்பாலும் எல்லாக் கிராமிய வழிபாடுகளிலும் பொதுவானவையாகும்.
- கிராமியத் தெய்வங்கள் சில பரம்பரையாகவும் குலதெய்வங்களாகவும் காப்பிய வழி வந்தவையாகவும் காணப்படுகின்றன
- இவ்வழிபாடு காலச்சூழ்நிலைக்கேற்ப மாறுபடினும் அது தொடர்ந்து நிலைத்து நிற்பதற்கு கிராமிய மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையே காரணமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 1.2.2 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம் நாட்டார் தெய்வங்கள் பற்றிய குறிப்புக்கள், நாட்டார் தெய்வங்கள் பற்றிய வழிபாட்டு அம்சங்கள் வீடியோ அல்லது புகைப்படங்கள் டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- ☐ ஆகமம் சாரா வழிபாட்டின் வரைவிலக்கணத்ததைக் கூறுவர்
- ஆகமம் சாரா தெய்வங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவர்
- பிரதேச ரீதியாகக் காணப்படும் நாட்டார் தெய்வங்கள் பற்றியும், சமய நம்பிக்கைகளையும் ஏற்று மதிப்பளிப்பர்.
- ஆகமம் சாரா வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவர்.

## செயற்பாட்டுப் பத்திரம்

குழு 01

- ஆகமம் சாரா வழிபாடு என்றால் என்ன?
- உமது பிரதேசத்தில் காணப்படும் நாட்டார் தெய்வங்களின் பெயர்களைத் தருக.
- ஆகமம் சாரா வழிபாடு இன்று நிலைத்து நிற்பதற்கான காரணம் யாது?

குழு 02

- ஆகமம் சாரா தெய்வங்களை நாம் வழிபடக் காரணம் யாது?
- ஆண், பெண் என்ற அடிப்படையில் நாட்டார் தெய்வங்களை வேறுபடுத்திக் காட்டுக.
- உங்கள் கிராமத்தில் நீங்கள் மேற்கொண்ட ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டு முறைகளைப் பட்டியற்படுத்துக.
- ஆகமம் சாரா வழிபாட்டினால் நாம் அடையும் பயன் யாது?

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

   1.……………………………………………………………………………………

   2.……………………………………………………………………………………

   3.……………………………………………………………………………………

   4.……………………………………………………………………………………

   5.……………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது)தங்கள் கிராமத்தில் அல்லது வசிக்கும் இடத்தில் காணப்படும் கிராமிய தெய்வங்கள் பற்றியும் அவற்றின் மீதுள்ள அபார நம்பிக்கையையும் வைத்து இறைவழிபாட்டில் தொண்டுகள் செய்து வழிபாடுகளில் ஈடுபடவேண்டும்.

**தேர்ச்சி 8.0 : ஈழத்துச் சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம் 8.1 :** ஈழத்து சைவாலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பர்.

**செயற்பாடு : ஈழத்துச் சைவாலயங்களைப் பேணிப் பாதுகாப்போம்.**

**நேரம் :** 05 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள் :**

- 1. ஈழத்துச் சைவாலயங்களை அறிவர்
  2. அவற்றின் சிறப்புக்களை அறிவர்
  3. அவ்வாலயங்களுக்குச் சென்று வழிபாட்டினை மேற்கொள்வர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- மாணவர்கள் தாம் தாமறிந்த ஆலயங்கள் பற்றிக்கூற இடமளித்து கலந்துரையாடலை நிகழ்த்துதல்
- விநாயக வழிபாட்டின் முதன்மை
- யாழ்ப்பாணத்தில் பிரசித்தமான விநாயகர் ஆலயங்களுள் பறாளை விநாயகர் ஆலயமும் ஒன்றாகும்
- திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரால் பாடல் பெற்ற ஈழத்துச் சிவாலயங்களில் ஒன்று திருக்கோணேச்சரமாகும்.
- வட இலங்கையின் சிறப்பான முருகத்தலங்களுள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும் ஒன்றாகும்.
- அம்மன் ஆலயங்களுள் ஒன்று திருகோணமலை பத்திரகாளியம்மன் ஆலயமாகும்.

**படி 2 :**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களை சிறுசிறு குழுக்களாக்குதல்.
- ஓவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- டிமைன்ற் பேப்பர், பேனா என்பவற்றை ஒவ்வொரு குழுவிற்கும் பகிர்ந்தளித்தல்
- ஓவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து, தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்தல்.

**படி 3:**
- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவிற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களின் குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முடுமுமைப் படுத்துங்கள்.

படி4:
- மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.
- அவர்கள் முன்வைத்த கருததுக்களுக்கு மேலதிகமா் கருத்துக்களையும் கூறுங்கள்.

**பறாளை விநாயகர் ஆலயம்**

- யாழ்பாண நகரின் வடமேற்கிலே சுழிபுரம் என்னுமிடத்திலே பறாளை விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது..
- இவ்வாலயத்தை இடிக்க வந்த போர்ததுக்கேய அதிகாரியின் கண்ணைக் காகம் ஒன்று கொத்தி அவரை இடிக்கவிடாது தடுத்தது. அதனால் பறாளை விநாயகர், கண்ணைக் கொத்திக் காக்கைப் பிள்ளையார் என அழைக்கப்பட்டார்.
- பறாளை விநாயகர் மீது பாடபபட்ட நூல் பறாளை

**திருக்கோணேச்சரம்**

- திருக்கோணேச்சரம் திருகோணமலையில் உள்ளது.
  இறைவன் - திருக்கோணேச்சரர்.
  இறைவி - மாதுமையம்பாள்
  தீர்த்தம் - பாவநாசம்
  விருட்சம் - கல்லால மரம்
- திருஞான சம்பந்தர் இத் தலத்தின்மீது தேவாரம் பாடினார்.
- பங்குனி உத்திரத்தில் கொடியேறி 18 நாட்கள் திருவிழா நடைபெறும்
- மகாசிவராத்திரிக்கு அடுத்த 5 நாட்கள் ஊர்வலம் நடைபெறும்

**மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்**

- யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் என்னுமிடத்தில் உள்ளது.
- மாருதப்புரவீகவல்லி தன் நோய் நீங்கப்பெற்ற தலம்.
- தீர்த்தம் - கண்டகி தீர்த்தம் விருட்சம்- காஞ்சிமா விருட்சம்
- ஐந்து தேர்கள் பவனி வரும் ஆலயம்.
- ஆடி அமாவாசையை தீர்த்தமாகக் கொண்டு 25 நாட்கள் திருவிழா நடைபெறும்

.

**திருகோணமலை பத்திரகாளியம்மன்.**

- திருகோணமலை நகரிலுள்ளது.
- பங்குனி உத்திரத்தை தீர்த்தமாகக் கொண்டு பத்து நாட்கள் திருவிழா
- சமுத்திர தீர்த்தோற்சவம்
- கேதார கௌரி விரதம் மிகச் சிறப்பானது.

**நுவரெலியா சீதையம்மன் ஆலயம்**

- நுவரெலியா நகரிலுள்ளது.
- நுவரெலியா பதுளை வீதியில் சீதாஎலிய எனும் இடத்தில் அமைந்துள்ளது.
- இறைவி - ஸ்ரீ சீதையம்மன் (இதனோடு ஸ்ரீ இராமபிரான், ஸ்ரீ இலட்சுமணன், ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆகிய திருவுருவங்களையும் மூலமூர்த்திகளாகக் கொண்டு வணங்கப்பட்டு வருகின்றது.
- தீர்த்தம் - ஆலயத்திற்குப் பின்புறமாக ஓடும் ஆறு. (சீதா கங்கை)
- தலவிருட்சம் - அசோகா மரம்
- 2013 ஆம் வருடம் தை மாதம் தைப்பொங்கல் தினத்தன்று முதற் தடவையாக இரத பவனி இடம் பெற்றது. இது சீதையம்மன் ஆலயமாயினும் இரத பவனியில் விஷ்ணுவையே எழுந்தருளி விக்கிரகமாகக் கொண்டு திருவிழா இடம்பெறுகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 1.2.2 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்
டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்
ஆலயங்கள் தொடர்பான படங்கள், திருவிழா தொடர்பான வீடியோ காட்சிகள்.

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- குறிப்பிட்ட ஆலயங்களின் அமைவிடங்களைக் கூறுவர்.
- இவ்வாலயங்களின் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களை விளக்குவர்.
- இவ்வாலயங்களின் பூசை, விழாக்களை இனங்கண்டு கூறுவர்.

### செயற்பாட்டுப் பத்திரம்

குழு 01

- இலங்கையில் பிரசித்தி பெற்ற விநாயகர் ஆலயங்களைக் குறிப்பிடுக.
- பறாளை விநாயகர் ஆலய அமைவிடம் பற்றியும் பிள்ளையாரின் சிறப்புப் பற்றியும் குறிப்பிடுக.
- இவ்வாலயத்தில் நடைபெறும் பூசைவிழாக்கள் பற்றி எழுதுக.

குழு 02

- திருக்கோணேச்சர ஆலயத்தின் சிறப்பினை பின்வரும் விபர அடிப்படையில் தருக.

  1. அமைவிடம் 2. இறைவன் 3. இறைவி
  4. தீர்த்தம் 5. தலவிருட்சம் 6. மகோற்சவ நாள்
  7. விசேட விழாக்காலங்கள் 8. பாடல் பாடியவர்கள்.
  9. இத்தலம் மீது பாடப்பெற்ற பதிகம் ஒன்றை எழுதுக.

குழு 03

- இலங்கையில் சிறப்புபெற்ற முருகன் ஆலயங்களைத் தருக.
- மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வரலாற்றுச் சிறப்பினைச் சுருக்கமாக எழுதுக.
- இவ்வாலயத்தின் திருவிழா பூசைமுறைகளைத் தருக.

குழு 04

- கிழக்கிலங்கையில் உமக்குத்தெரிந்த அம்மன் ஆலயங்களின் பெயர்களை எழுதுக.
- திருகோணமலை பத்திரக்காளியம்மன் ஆலய அமைவிடத்தினையும் சிறப்பினையும் தருக.
- இவ்வாலய மகோற்சவம், விசேட விழாக்கள் என்பவற்றைத் தருக.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

   1……………………………………………………………………………………………

   2……………………………………………………………………………………………

   3……………………………………………………………………………………………

   4……………………………………………………………………………………………

   5……………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது)

   தங்கள் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களை உரிய முறையில் சரியைத் தொண்டுகள் செய்து பாதுகாத்து இறைவழிபாட்டை மேற்கொள்ள முடியுமான அளவு பங்கு பற்றுதல்களை ஏற்படுத்திக் கொடுங்கள்.

**தேர்ச்சி 9.0 : பிறசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிற்கு மதிப்பளிப்போம்.**

**தேர்ச்சி மட்டம் 9.1 :** பிறசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து கொள்வர். அவை பற்றி விளக்குவர்.

**செயற்பாடு : இலங்கையில் உள்ள சமயங்களை அறிவோம். அவர்களின் வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து மதிப்பளிப்போம்.**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

- இலங்கையில் உள்ள சமயங்களை அறிவர்.-
- பிற சமயங்களுக்கு மதிப்பளிப்பர்.
- சைவசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து வாழ்வில் கடைப்பிடிப்பர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1 :**

- இலங்கையில் உள்ள சமயங்களைக் கூறும்படி மாணவர்களிடம் வினவுங்கள்.
- அவர்கள் வழிபடும் கடவுளர் பற்றி கேட்டு அறியுங்கள்.
- அவர்கள் கொண்டாடும் விழாக்கள் பற்றி கலந்துரையாடுங்கள்.

**படி 2 :**

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களை சிறுசிறு குழுக்களாக்குதல்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- டிமைன்ற் பேப்பர், பேனா என்பவற்றை ஒவ்வொரு குழுவிற்கும் பகிர்ந்தளித்தல்
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து, தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்தல்.

**படி 3:**

- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவிற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களின் குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முடுழுமைப் படுத்துங்கள்.

படி 4 : - ஒவ்வொரு மாணவரும் எழுதிய அறிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- ஒவ்வொரு மாணவரினதும் செயற்பாட்டிற்கும் ஏனைய மாணவர்கள் கத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.
  - · சைவம், கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் இலங்கையில் உண்டு.
  - ☐ சைவம் - சிவன்
    கிறிஸ்தவம் - இயேசு
    பௌத்தம் - கௌதம புத்தர்
    இஸ்லாம் - அல்லாஹ் ஆகிய கடவுள்களை வழிபாடு செய்கின்றனர்.
  - ☐ இச் சமயங்களின் முதல் நூல்கள்
    சைவம் - வேதம், ஆகமம்
    கிறிஸ்தவம் - பைபில்
    பௌத்தம் - திரிபீடகம், தம்மபதம்
    இஸ்லாம் - திருக்குர்ஆன்
  - ☐ விசேட விழாக்கள்
    - ☐ சைவம் - சித்திரைப் புத்தாண்டு, தைப்பொங்கல், தீபாவளி
      கிறிஸ்தவம் - பெரிய வெள்ளி , நத்தார் பண்டிகை
      பௌத்தம் - புதுவருடம், வெசாக்
      இஸ்லாம் - றமழான், ஹஜ் பெருநாள்
  - ☐ இம் மதங்கள் இறை உண்மையையும், அன்பையும், இறைபக்தியையும் விளக்குகிறது.
  - ☐ சகல மதங்களையும் போற்றி மதிப்பளித்தல் வேண்டும்

உள்ள

**தரவிருத்தி உள்ளீடுகள்** : இணைப்பு 1.2.2 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்
சமயங்களின் பிரதான நூல்கள், பன்டிகை தொடர்பான காட்சிகள், வீடியோ ஒளிப்படங்கள்
டிமைன் கடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- இலங்கையிலுள்ள சமயங்களை அறிவர்.
- சமயங்களின் பிரதான தெய்வங்களை பட்டியற் படுத்துவர்.
- ஒவ்வொரு சமயத்துக்குமுள்ள முதன்மையான நூல்களை கூறுவர்.
- ஓவ்வொரு சமயத்தாரும் கொண்டாடப்படும் விழாக்களைக் கூறுவர்.
- பிறசமயங்களுக்கு மதிப்பளித்து வாழ்வர்.

**இணைப்பு 9.1.1 செயற்பாட்டுப் பத்திரம்**

இலங்கையில் உள்ள சமயங்கள்

| சமயங்கள் | வழிபாட்டுக்குரியவர் | முதன்நூல் | விசேட விழாக்கள் |
|---|---|---|---|
| 1.சைவசமயம் | | | |
| 2.கிறிஸ்தவம் | | | |
| 3.பௌத்தம் | | | |
| 4.இஸ்லாம் | | | |

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

   1.……………………………………………………………………………………………

   2.……………………………………………………………………………………………

   3.……………………………………………………………………………………………

   4.……………………………………………………………………………………………

   5.……………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) இலங்கையில் உள்ள அனைத்து சமயங்களையும் அதன் கருத்துக்களையும் நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களையும் தேடி அறிந்து அவற்றுக்கு மதிப்பளிக்கும் வகையில் பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள். சமயக்கருத்துக்களை வாழ்வில் பின்பற்ற வழிகாட்டுங்கள்.

# கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்றேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்கு தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல் /முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி.:. முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு
14. பேச்சுக்கள்
15. சுய ஆக்கங்கள்
16. குழுச் செயற்பாடுகள்
17. எண்ணக்கருப் படங்கள்
18. இரட்டைப் பதிவு - ஜேர்னல்
19. சுவர்ப் பத்திரிகைகள்
20. வினா - விடை நிகழ்ச்சிகள்
21. வினா - விடைப் புத்தகங்கள்
22. விவாதங்கள்
23. குழுக் கலந்துரையாடல்கள்
24. கருத்தரங்குகள்
25. உடனடிச் சொற்பொழிவு
26. பாத்திரமேற்று நடித்தல்